கலாநிலயம்

V1. No. 10 8 மே 1928

ஜ
ஜ2N, N128KN
N28·1·10
188993.

669 Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஞூ மார்ச்சுமீ 8உ [No. 10.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 MAY 1928
MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்.
1.	செய்யும் கருமமும் செயல் வகையும்	181	5.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L.	192
2.	காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L.	183	6.	மதிப்புரை	194
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L.	187	7.	அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர். B. A.	195
4.	தமிழ்ப்பாடம்.	189	8.	அரசியர் மலர்வன மல்லிகை	196
			9.	வர்த்தமானம்	197

க லா நி ல ய ம்.

செய்யும் கருமமும் செயல் வகையும்.

IX

எப்பொருட்கும் மெய்ப்பொருளா யமைந்த வொரு தனிப்பே ரொற்றுமையை யிவ்வுலகி லுணர்வதற் காதாரமாகு மிலக்கியக் கல்வியின தருஞ் சுவைப் பயிற்சியை யாவரு மெய்தும்படி சாதனமாமா றுமுயல்வதே நம் கலாநிலயம் கைக்கொண்ட கருமமாயிற்று. ஆயிற்றெனின் அந்நோக்கத்திற் கிணங்கி நாம் ஆற்றுகின்ற வகைகளு மெவையென வொரு சிறிது கூறுவோம்.

இலக்கியங்க ளெல்லாப் பாஷைகளிலு முள. அவைதம்முள் தமிழ் இலக்கியங்களே இங்குப் பெரிதும் இடம்பெறும். தமிழினிடத்திலே சிறப்பாய் எமக்குள்ள வொரு அபிமானத்தினால் அவ்விலக்கியங்களைத் தேர்ந்து கொண்டோம் என்று எண்ணவேண்டா. மற்றப் பாஷைகளுக்கு ஓர் பழுதுளது என்றெண்ணி யொரு பாஷையைப் பாராட்டவருவது அரைப்பார்வை அபிமானமாகும். பாதிநோக்கம் எவ்விதத்திலும் இப்பத்திரிகை கொள்ளாது. மற்றவை யனைத்தையும் வெறுத்துத் தமிழையே கற்கவேண்டு மென்று முரணுகின்றவர்களது மனப்பான்மை எமக்கு மிகுந்தவியப்பைத் தந்து நிற்கின்றது. தாய்நாடு என்பதுபோல் தாய்ப்பாஷைஎன்பதுவும் வாசா கைங்கரிய விவகாரங்களுக்கு ஏற்ற வாசகமே யல்லாது நன்மை பயத்தற்குரிய நவிற்சியன்று. தாய்ப் பாஷை என்பதை உவமைத்தொகையென்று கொள்வதே தர்மம். தாய்போன்ற பாஷை என்பது அதன் விரி. தாய்போன்று அருமையாய் ஒருவனுக்கு உதவுவது பாஷை, என்ற பொருளில் உபயோகப்படுமாயின் தாய்ப்பாஷை எனப் பாராட்டுவது பிழையாகாது. தாய் என்பது இங்குச் சிறப்படை மொழியல்ல. பாஷைப் பயிற்சியின் தன்மையைக் காட்டும் இயற்கை யடைமொழியே யாகும். இதனைவிடுத்துத் தாய்ப்பாஷை என்றால் ஒருவனது தாயினால் பேசப்பட்ட பாஷை என்று அதற்கு ஒரு சிறப்புக் கொடுத்துச் சொல்வது குறுகிய நோக்கத்தின்பாற் படும். தாயோ ஊமையானால் பிள்ளையும் பேசாதிருப்பதே சிறந்ததென்றபடி முடியாமல் காத்தல் நலம். பாஷை யெதுவானாலும் ஆன்றோர் அருளிய இலக்கியங்கள் யாவும் சற்று ஏறக்குறையச் சமமாய பெருமையோடு நன்மையைப் பயக்க வல்லனவென்பதில் ஐயமில்லை. இத்தகைய கொள்கை எமதாதலால் தமிழிலக்கியங்களையே கலாநிலயம் பெரிதும் கையாள்வது மற்றப் பாஷைகளோடு கொண்டவொரு மாறுபாட்டினால் நேர்ந்தபடி யன்று. எனின், தமிழிற்குத் தொண்டு புரிகின்றதெனும் சொல் எம்வரையிற் பொருந்திடாது. தமிழுலகினில் இன்பச்செவ்வி எய்திய நல்வாழ்வின் கூட்டுறவு ஒருசிறிதேனும் எமது முயற்சியால் கைகூடுமோ வெனும் ஆசையே இப்பத்திரிகையைத் தூண்டி நிற்கின்றது. தமிழை வளர்ப்பதெனும் வழக்கும் தக்கதாகாது. தமிழிலக்கியங்களின் பெருமையும் அவைகளிலுள்ள அழகும் யாவரும் உணர, அதனால் வேறுநலங்கள் வளர்வதே நினைவாதலின்.

தமிழர்களுக்கிடையே ஓர் இலக்கிய உணர்ச்சி உண்டாக்க முயல்வதானல் பத்திரிகை வாயிலாக அதைச் செய்வதற்குத் தமிழ் இலக்கியத்தை எடுத்துக் கொண்டால் கருமம் சிறிது சுலபமாயிருக்கும் என்று எண்ணி ஆரம்பிக்கின்ரும். வீட்டில் பேசுகின்ற பாஷை தமிழாயிருந்தும் அப்பாஷையிலுள்ள இலக்கிய வாசனையென்பது ஆங்காங்கே இரண்டொருவர்தவிரப் பொதுவாய்த்தமிழர்களுக்கு இல்லே. ஆங்கிலம் கற்ற தமிழர்களின் பெரும் பகுதியோர் அதனை வயிற்றுப் பிழைப்பிற்காகவே கற்ருராதலின், கலாசாலைகளில் ஓதிய சில ஆங்கில இலக்கியங்களையும் அன்ருேடு மறந்து, பின் அப்பாஷையை மாத்திரம் தாம் கற்றவர் என்று காட்டிக் கொள்ளவும் உத்தியோகக் காரியங்களிலும் தினசரி வர்த்தமானப் பத்திரிகைகளை மேலோட்டமாய்ப் படிப்பதற்கும் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிருர்கள். ஆங்கிலக் கவிகளெல்லாம் இப்பொழுது அவர்களுக்குப் பேரளவுதான் தெரியும். அனையவர் தம்மால் மேன்மேலும் பிறருதவியின்றிப் படிக்க வல்ல ஆங்கிலக் கவிகளைத்தான் கைவிட்டாராஞலும் தமிழிலக்கியங்களேனும் கற்பதற்கு வசதி யுண்டாஞல் ஒருவேளை கற்கப் புகினும் புகலாம். ஆரிய இலக்கியம் பயின்ற சில தமிழர் தமிழிலக்கியமும் பயில ஆசையுடையவரா யிருக்கின்றனர். கற்கை நன்றே கற்கைநன்றே பற்பலபாஷை கற்கைநன்றே.

தமிழைத்தவிர வேறுபாஷை தெரிந்திராதவர்க்குப் பத்திரிகை மூலமாய்ப் போதிக்க இயல்வது தமிழிலக்கிய மாதலாலும், ஆங்கிலம் கற்றிருந்தும் அதன் காவியங்களைக் கைவிட்ட தமிழர் இதனையேனும் தொடர்வரோ என்னும் விருப்பிஞலும், வடமொழி கற்றவர் தமிழிலக்கியமும் தெரிந்து கொள்ளச் சாதனமாகும் பொருட்டும் இப்பத்திரிகை தமிழிலே தமிழிலக்கியங்களைப் பற்றி நடைபெறுவதாகின்றது.

இனித் தமிழ் படிப்பதென்ருல் பலவித எண்ணங்கள் இக்காலத்தில் நிலவி வருகின்றன. நமது பாடசாலைகளில் தமிழிற்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று வாதிப்பவர், இலக்கியத்தை நினைத்துப் பேசுகின்றனர் என மதிக்க இடமில்லே. ஆங்கிலம் படித்துப் படித்து நம் சிறவர் சக்திகுன்றி வாடிப் போகின்றனர் என்றும், கணிதம் சாஸ்திரம்போன்ற பாடங்களும் தமிழ்ப்பாஷையின் மூலமாய்ப் போதிக்கப்பட வேண்டுமென்றும் அவர் வற்புறுத்துவதாகவே காண்கின்றது. இக்கொள்கை எமது கருத்திற்கு இணங்கவில்லே. ஆங்கிலப்பயிற்சியும் கெட்டுத் தமிழிலும் ஒன்றும் தேராது எஞ்சுவதற்கே இயன்ற ஏற்பாடு இது! ஆங்கிலம் படித்துப் படித்தல்ல நம் சிறுவர் வாடிப்போவது. சினிமாவிற்குப் போய்ப் போய் வாடிப் போகின்றனர்.

. முன் சொன்னபடி தமிழ் படிப்பதென்ருல் தமிழால் படிப்பது என்பதல்ல பொருள்; மற்றுத் தமிழைப்பற்றிப் படிப்பது என்பதும் சரியாகாது. தமிழென்ற பேரைச் சொல்வதனின் முன்னே, அதனைப்பற்றிய ஆராய்ச்சி பலவற்றுள் தலையிட்டுக் கொண்டு விடுகின்றனர். மணிமேகலையும் சிலப்பதிகாரமும் திறந்த மாத்திரத்தில், அந்தக் காலப் பழக்க வழக்கங்களையும் வருகின்ற அரசர்தம் காலத்தையும், எந்த ஆறு எந்த வழியோடிய தென்பதையும் நிர்ணயிக்கச் செப்புத்தகடும் சிலாசாஸனமும் இடிந்த கோபுரங்களும் தேடுவதன்று அவ்விலக்கியங்களைப் படிக்குந்திறம். வேறு சிலர் சொல்லிலக்கணமே சிந்திக்கின்றனர். இவைகளும் இவைபோன்ற பிறவும் தமிழ் படிப்பதாகா, பயனுமில்லே.

கலாநிலயம் கவிகளையும், அவர்கள் கருத்தின தகலமும் மொழியினதழகும் இருக்குமாறும்,பாராட்டி விளங்கவைக்கின்ற வகையினில் முன்கூறிய அதன் கருமத்தை ஆற்றும். உட்கருத்தின் உயர்வினேடு விளங்குகின்ற சில பிறபாஷைப் புலவர்களின் நூற்பகுதிகளும் மொழிபெயர்ந்து வருவதால் மேன்மக்களது நோக்கம் உலகத்தின் எப்பக்கத்திலும் ஒருபுடைச் சிறப்புடைத்தாயிருத்தல் விளங்குவது நலமென அதைச் செய்து வருகின்ரும்.

இனி, எம் பத்திரிகையை வாசிக்கும் நண்பர்கள் பல்திறப்பட்ட தேர்ச்சி தமிழில் உற்றவர்களாயிருப்பரென்பது உணர்ந்து அவரவர்க் கியன்றபடி கட்டுரைகள் அமைந்துள்ளன. தமிழரிற் பெரும் பகுதியோர்க்கு அப்பாஷையைப் பேசவும் படிக்கவும்தவிர வேறு எவ்விதப்பயிற்சியு மில்லேயென்பது யாவரும் அறிவர். அவர்களுக்கென்று சிறப்பாக அமைந்தது நம் தமிழ்ப்பாடம். மூன்று மாதகாலம் அப்பகுதியை மேலோட்டமாயல்லாது ஆழ்ந்து படிப்பாராயின் பத்திரிகையின் மற்றப் பகுதிகளையும் சிறிது முயற்சியால் படித்துத் தெரிந்துகொள்ளக் கூடியவராவ ரென்பதில் ஐயமில்லே. மற்றக் கட்டுரைகளும், வரவர நமது நண்பர்கள் இலக்கிய நூல்களைத் தாமாக அச்சமின்றி யெடுத்துப் படித்துக் கொள்ளப் பயிற்சி தரத்தக்கனவா யமைந்துள்ளன. ஸ்ரீமான் K. இராமரத்ந ஐயர் விளக்கிவரும் அகப்பொருள், ஸ்ரீமான் T. P. மீனுட்சிசுந்தரம் செய்து வரும் பொருளாராய்ச்சி, ஸ்ரீமான் T. N. சேஷாசலம் எழுதிவரும் கம்பராமாயணக் கட்டுரைகள் யாவும் தமிழிலக்கியங்களின் தன்மையைக் காட்டி அவைகளோடு பழகுவதற்கு ஏற்ற சாதனங்களாயமைந்தவை.

இலக்கணப் பயிற்சி ஒரு சிறிது அவசியமே. ஆஞல் அதற்கென்று தனிப் பகுதி தராமல் தமிழ்ப் பாடத்தின் சார்பிலேயே ஐந்து இலக்கணங்களிலுங் கண்ட விஷயங்களில் முக்கியமானவைகளைப் போதிக்க இயலும் என்று எண்ணிச் செய்து வருகிரும்

முதலிலே ஆரம்பிக்கின்றவர்கள், இப்பத்திரிகையில் வருகின்ற கட்டுரையாவும் கடினமானவையென்று எண்ணிக் கைசோரவேண்டா. அப்படிப் பட்டவர்களுக்குத் தெரிந்த தமிழ் வெகு அற்பமாயிருக்குமாதலால் அவர்களுக்கும் தெரியும்படி எழுத வல்லதொன்றும் பயன்படக் கூடியதாயிருக்காது. ஆதலால் அவர் நிலைமைக்குத் தாழ்வதால் வார்த்தை நிறைக்க இயலும், கருத்தொன்றும் காட்ட இயலாது. பார்க்கப்போஞல் தமிழின் நடையுமன்று அவர்களுக்குக் கஷ்டம் தருவது. அதிலடங்கியுள்ள கருத்துக்கள் புதியனவாதலால் விஷயம் எளிதில் தெரிகின்றதில்லே. ஆழ்ந்து ஒரு முறைக்குப் பன்முறை படிப்பதற்குவேண்டிய அவகாசம் ஏற்படுத்திக் கொள்வாராஞல் நாலைந்து வாரங்களில் யாவும் அவர்களுக்குச் சுலபமாய்விடும். நமது நண்பர்களுள் இவ்வாறு முயன்றவர்களது அனுபவமும் இதுவேயா யிருக்குமென்று எண்ணுகின்ரும்.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(165-வது பக்கத் தொடர்ச்சி)

8. பாண்மகள்.

மடத்தினதுமேன்மாடத்துச் சாளரவாயிலால் மணிவாளன் காணஇயலாத பலநிகழ்ச்சிகள் அம்முற்றத்தின்கண் நடைபெறுவதாயின. நாற்புறமும் வானளாவிய மாளிகை சூழ்ந்து இடையிருந்த வெளியின் நடுவில் கற்களாலாயதொரு தெற்றியின்மீது பாண்மகள் ஏறி நின்றனள். அவளணிந்த ஆடையாம் வட்டுடையும் வடகமும் புழுதிபடிந்தன வேனும் விலேயுயர்ந்தன. வார்குழலே வேணியாக்கி முடிந்திருந்தனள். அதன் உச்சியினின்று மலைவீழருவி போல் சரிகைக் கம்பிகள் நான்றன. செம்பரத்தம் பூவிரண்டை இரண்டுகாதிலும் தோடெனத் தொடுத்துச் சிமிக்கிமலர்களைக் குண்டலங்களாகத் தொங்கவிட்டிருந்தாள். சண்பக மாலேயொன்று இப்பிபோன் றௌளிரும் அவள் கந்தரத்தைச் சூழ்ந்து மார்பினிடம்புரண்டது. இடைக்கு மேகலை கொன்றைத் தொடர். மல்லிகை மலரை அரியரியாய்த் தொடுத்துக் கைக்குக் கங்கணமாகவும் பாரிசாதத்தைத் தொடுத்துக் காலிற்குச்சதங்கையாகவும் அணிந்திருந்தனள். பல்லோ முல்லேயரும்பு. படிவத்தில் வல்லியே யனையாள். இப்பாண்மகள் தோற்றமே, கொண்டல் தவழும் முழுமதியன்ன முகஒளியின் கீழ் விளங்குமொரு சிங்கார வனத்தை ஒத்திருந்தது. அவ்வனத்தில் மொய்க்கும் களிவண்டுகளாய் அவளைக் கண்டவர்தம் கண்களெல்லாம் பொருந்தின. கிள்ளையும் பிரசமும் அம்மாதின் மதுரக் கிளவிகள். சாயலில் மயிலன்னுள். குரல் குயிலைக் கூவியழைத்தது. நடையினில் தானே அன்னமு மாயினுள். பொதும்பருக்குரிய இருளும் அவளுள்ளத் தடர்ந்த துன்பமேயாகும். பிரம்மத்தினிடத்தில் பிரபஞ்ச மத்தனையும் ஒடுங்குவதேபோல் காமனுலவிய பூஞ்சோலைச் செய்தியெல்லாம் இப்பாண்மகள் தன்னில் அடங்கியிருந்தன.

ஆயவள் அப்பகல் வேதிகைமீ தேறித் தங்கச்சிலேயெனநின்று, தன் வீணைக்கு நாதம்கூட்டி "யான் சங்கீதம் வல்லேன், அஃது துய்ப்பார் ஈங்குளரோ!" என்பாள் போல் நான்மருங்கும் நோக்கினுள். அரசனையும் உட்சென்றிருந்த மணிவாளனையும் சேர்ந்த சில வாலிபர்களும் வீரக்குமாரும் பிரபுக்களின் புத்திரர்களும், "இசைதனிற்குச் செவியுண்டு; இனியதாயின் ஏற்போம்," என்பவர்போல அவளை நெருங்கிச் சூழ்ந்தனர். நரம்பளைந்து அந்நங்கையும் நல்லிசைச்செல்வம் அள்ளியள்ளி அவ்விளைஞர்தமக்கு நல்கினளாயினுள். இன்னதற்கிடையில், "வழி விடுமின், விலகுமின் விலகுமின். காந்தாரம் உய்யவந்த திருச்செம்மல் சித்ராங்க இளவரசர் இவ்வழியே திருவுளம்கொண்டு எழுந்தருள்கின்றனர்," எனக்கட்டியங் கூறிப் போந்தன ஞெருவன். சித்ராங்க இளவரசனும் பெருத்ததொரு கார்நிறப் புரவிமீது ஊர்ந்து இளைஞர் பலர் பின்தொடர "என் பொருட்டாரையும் வெருட்ட வேண்டா" என இயம்பியவனுய்ப் பாண்மகளுக்கு எதிரிடம் வந்து சேர்ந்தான். அக்கலினமா பாண்மகளைக் கண்டதும் கனைத்தது. அருகில் படிந்திருந்த அவனது வேட்டைநாயும் இளவரசன்தன் காலருகு தாவி வால் குழைத்துச் சிறுகுரலால் குலைத்தது. "தோழர்காள், சற்று நில்லுங்கள். பாடலிற்குப் பங்கம் எம்மால் வருவது கூடாது," என்று சித்ராங்கன் கூற அவர்களும் தம் குதிரைகளை நிறுத்திவிட்டனர். பாண்மகளோ யாழினைத்தாழ்த்தித் தன் நாயினது தலைமீது ஊன்றியவளாய்ப் பாடுவதொழிந்து நிற்க, அமுதினும் நயந்து நோக்குமவளை அரசிளங்குமர னணுகிக், "கண்மணி, எடுத்த இசையை முடிக்காதொழிந்ததேன். யானென்ன பெண்ணே, கதிரவனே, என்னைக்காண உனது குமுதச் செவ்வாய் குவிகின்றது?" என அவளது கன்னமிரண்டினையும் விளையாட்டாக வருடிக் கேட்க, அவளும்; "அரசே, பாடுகின்றேன், ஆஞலிச் சமயம் வேறுபாடல்," எனச் சிறிதுநேரம் மீண்டும் பாடியோய்ந்தனள். ஓய்ந்ததும், தன்னுணர்வையெல்லாம் இதுகாறும் அவளிடமே விற்றிருந்த இவ்விளங்குமரன், "அடி பூமகளே. சோகச் சுவையிது நீ தேர்ந்ததேன். நின்தொழிலேயும், அணிந்த கோலத்தையும் இருக்குமிடத்தையும் கருதிஞல் சிங்காரமல்லவோ நினக்கேற்ற சுவையாகும்......இருக்கட்டும்...இதனுள் என்ன வைத்திருக்கின்ருய், குழந்தாய்," என அவள் தோளினின்று தொங்கிய பையுள் தன் கையையிட்டு முந்திரி இலந்தைப் பழங்களில் ஒருபிடி எடுத்துப், "பெண்ணே, நீ, மலர்வனமென்றுதான் எண்ணினேன், கனியும் உதவவல்லேயோ!" என்று, அப்பழங்களுளொன்றைத் தன் வாயுள்போடவே அவள், "ஏழையேன் என்னுணவை அரசரும் கவர்வரோ!" எனக்கேட்டு உருக்கமாய் நோக்கினள். சித்ராங்கன் சிரித்துத் தலைநிமிர்ந்தனன். அன்றுதான் உயிர்த்தெழுந்த மன்மதனை மறுபடி நீருக்க உருத்திரமூர்த்தியே வந்தெதிர்நிற்பதுபோலும்,அறைந்த தூணிடைப் பிறந்தழன்ற அந்நரசிம்மத் தோற்றமே போலும்,கஜேந்த்ரஸிம்மன் கண்ணில் பொறிசிந்தப் புருவம் நெற்றிமுற்றச்செல்ல வாயில் நகையும்வர ஆடல்மா ஒன்றின்மீது இருக்கப்பார்த்தான் சித்ராங்கன். தனதரசமருகனை இக்கோலம்கண்ட மாதுலன் எது செய்வனேவென்று இருதிறப் பரிவாரத்தினரும் இமைகொட்டாது அயிர்த்தனர். சித்ராங்கனேசிறிதும்மதியாது அவன்முகம் எள்ளிய பார்வைபோக்கிப் பாண்மகள் பக்கம் திரும்பி, "இந்தா சிங்காரி, பாடியபாட்டிற்குப் பரிசு ஒருபொன். நான் திருடிய கனிக்கு ஒருபொன்...நினதுமெல்லிய அதரந்தனஞல் இப்பொழுது எனக்கு நீ அளிக்கவேண்டிய மதுரமுத்தத்திற்கு முன்பணமாய் இந்தா இன்ஞென்று" என மூன்றுபொன் நீட்டினன்.

"வள்ளலே, பாடற்குத் தக்க பரிசில் கிடைத்தது பழமும் அரிய விலேக்கு விற்றிருக்கின்றது. இதற்குமேல் வியாபாரம் நுமக்கு மெனக்கும் நேர்வ தழகன்று!"

"இதுவென்ன புதுமையிது! நாணும் நிறையுமோ பாணப்பெண்ணே நினக்கு! யான் கேட்டதை இதுவரையில் யாரும் மறுத்தறியேன்."

பாண்மகள் பின்னும்சும்மாஇருந்தாள். அயல்நின்றவர், "சந்தி சிரிக்கும் அசதியகளே, காந்தாரதேசத் திளவரசர் அவர்—சித்ராங்க சிங்காரன்," என்றெடுத்துக் காட்டினர். இது காட்டியதால் தேர்ந்தவள்போல் பாவித்துச் சித்ராங்கனை அண்ணுந்து நோக்கி, "அரசகுமாரா, அசுவமோ உயர்ந்தது. நின்னையான் எட்டுவதெங்ஙனம்" என்றனள். சித்ராங்கனும், "இதுவோ மங்காய் இடையூறு,என்காலின்மீது நினதுபாதந்தனைவைத்து இக்கரங்களைப் பற்றியேறுவாய்" எனலும்,அவள் வெகுஎளிதில் அன்னவாறு செய்தனள். அந்நிலே நின்றவளின் இடையைத் தன் கையால் சித்ராங்கன் சூழ்ந்து தாங்கி முத்தங் கொடுக்க முகத்தருகு வருகையில், "பெண்ணே

யுனக்குப் பேரொன்றுண்டானால் அதைச் சொல் பார்ப்போம்,"என்றனன். 'மாதவி' என்றனளவளும். "மாதவி, இது எதற்கு ஒன்று" என்று காந்தள்மலரின் இதழைத் திலகமாய்க் கிள்ளி அவள் நெற்றியில் ஒட்டிவைத்திருந்ததைச் சித்ராங்கன் அழித்து விட்டான். மாதவி புன்னகை புரிந்து, "என்னரசே, அந்தரத்தில் என்னை இன்னவாறு ஆட்டிவைத்தலும் அழகா! மற்று இதனை அழித்ததேன்!" எனவினவினள். "மதிக்கு மறுதுடைத்தேன்," என்றான் சித்ராங்கன். மாதவியும், "காந்தளை விலக்கிடின்......" என்று வாயெடுக்கையில் சித்ராங்கன் "முத்தம் கொடுத்துவிட வேண்டும்," என வாக்கியத்தை முடித்து, அவளது துடித்தவாய் அமைய ஆழ்ந்த முத்தம் ஒன்று கொடுத்து "இச்சுவைக்கு விலைதர வகையிலா ஏழையேன்......எனினும் இக்கிழியோடு பொன்னைக்கொள்" என்றதை அவள் பழப்பையினுளிட்டு அவளைக் கீழிறக்கி விட்டனன். விட்டதுமவள் கலைந்து நெகிழ்ந்த தன் உத்தராசங்கத்தைத் திருத்தியவளாய் நாயையும் அழைத்துக்கொண்டு புறப்பட எத்தனிக்கையில் சித்ராங்கன் "சுந்தரி, பொறு பொறு. இன்று நானுனக்கு உவந்தளிக்க இசைந்த அருள் இன்னும் முற்றுப்பெறவில்லை," என, மாதவி அணிந்திருந்த சண்பகமாலையைக்கழற்றித் தன்கழுத்தில் போட்டுக்கொண்டு 'நின்னையும் நின்மகளையும் தினையளவு மதியாது யான் இத்தனையும் செய்கிறேன்' என்றியம்புவான்போல் துடித்த தோளினனாய்க் கஜேந்திரஸிம்மன் இருந்த இடம் திரும்பிக் கம்பீரமாய்ப் பார்த்தான்.

பாண்மகள் கழுத்திலிருந்து சித்ராங்கன் பூமாலையைக் கழற்றும்போதே கஜேந்த்ரஸிம்மனது உடைவாளும் தன் வள்ளுறையினின்றும் கழல்வதாயிற்று "அடாத நிந்தனை ஆற்றினாய், அட கெடுவாய், படாதபாடு படுகின்றனைபார்!" என்றவன் இளவரசன்பால் தரைதோண்டித் தாவும் தன் குதிரையைத் தூண்டினான். சித்ராங்கனோ சிறிதும் கலங்காதவனாய், "மாமா, உமக்குப் புள்தண்டாட்டம் ஆடத் தெரியுமோ," எனத் தனது இடது உள்ளங்கையில் முந்திரிக்கொட்டையொன்று இட்டு அதைத் தன் வலக்கைப் பெருவிரலால் தட்டிவிட, அதுபோய்க் கஜேந்த்ரஸிம்மனின் மார்பில்பட்டு விழுந்தது. "நல்லது, மாமா, கவசமணிந்திருந்ததால் இக்கொட்டைபட்டுக் காயமடைந்திருக்க மாட்டீர்.........ஆனால், நல்லவேளை நமது இடக்கண்ணில் அது படவில்லையே!" என்றனன் இரக்கமோ சிறிதுமற்ற அவ்விளவரசன். கஜேந்த்ரஸிம்மனுடைய இடக்கண் கண்ணாடியாலாகிய பொய்க்கண் என்பது அருகிருந்தோர் அறிந்திருந்தாராகையால், அவர் பயந்தவரேனும் சிரிப்பை யடக்க மாட்டாமல் சிரித்துவிட்டனர். இச்சிரிப்பு, கொதித்தெழும் அக்கஜேந்த்ரஸிம்மனது கடல்போன்ற கோபத்தைப் பின்னும் சுறாவளி சுழற்றியது போலாயிற்று. அரசனனுப்பிய அகிலாண்டேச்வர ஆசார்ய சுவாமிகள் இச்சமயம் வந்திராவிட்டால் எப்படி முடிந்திருக்குமோ. "ஐய, ஆண்டவனாணை. இவ்விளவலை யாதும் செய்யேல்," என்றோதினராய் அவர் எதிர்வந்து தோன்றினர் கஜேந்த்ரஸிம்மன் அவரைப் பார்த்துச் "சுவாமிகாள், இச்சீர்கெட்ட சிறுவனைக் கொன்றிட எண்ணிலேன். எனினும் என்பாலிழைத்த பரிபவத்திற்கு எதிரொன்று செய்யாது விடேன்" எனக்கூறித் தன் பரிவாரத்தினருள் சிலரை விளித்துப் பாண்மகளைக் காட்டி, "என் மருகனுக்கு மாலையிட்ட இப்பரத்தையை வாயிற்படிகளுக்கப்பால் உதைத்துத் தள்ளுவீர். கசை யெடுத்துக் கைகொண்டமட்டுமடியுங்கள். அவ்விளையாட்டுச்சிறான் கஜேந்த்ரஸிம்மனுக்குக் கோபமூட்ட ஏதுவாயிருந்த தன் பயனை ஆயுள்வரையில் மறவாதிருக்கும் வண்ணம் அவளைச் சித்திரவதைசெய்து அனுப்புங்கள்," என உதடுதுக்கிப் பற்கடித்துக் கட்டளையிட்டான்.

இதுகேட்கக் கடுங்கோபம் வந்தது இளவரசன் சித்ராங்கனுக்கும். "இவ்வேழைப் பாண்மகளை அடிப்பதும் உதைப்பதும் உம்மாலாவதோ, கயவர்காள்," எனப் பாய்ந்தவர்களைத் துரத்தி, "நான் தடவிக் கொடுத்த நாயைத் தொட்டவனும் உயிருடன் மீளானே! என் முத்தம்பெற்ற இச்சீமாட்டியைத் தள்ளிதான் பிழைப்பவன் எவனென்பதையும் பார்த்துவிடுகின்றேன்," எனச் சூளுரைத்துக் குதிரையை அவர் நடுவில் கடவியபோது, பெருங் கூட்டமொன்று சண்டையிட்டுத் துரத்தியவர் சிலரும் ஓடுபவர் சிலருமாய் மருகன் மாதுலற்கிடையே புகுந்தடர்ந்தது. இக்கூட்டத்தில் ஒரு திறத்தார் கஜேந்த்ரஸிம்மனது ஆட்கள் என்பது அவருடையாலும் அணிந்த சின்னங்களாலும் தெரியக்கூடும். மற்றவர் இரத்தினபுரி வாசிகள். இந்தக் கலாமும் குழப்பமும் ஒரு நன்மைக்கே யாயது. இகனாற்றான் அரசகுமாரனையும் கஜேந்த்ரஸிம்மனையும் கோபம் தணித்து விலக்கச் சமயம் பார்த்திருந்த சிலர் முன்வருவதற்கு இயன்றதாயிற்று. விராடபத்ரன் கஜேந்த்ரஸிம்மனை யடுத்துக் "கடுங்கோபம் தணிக," என்றனன். ஸிம்மனோ, "மேன்மேல் பரிபவம் புரிந்த இப்பதரும் பிழைப்பதோ," எனத் துடித்தனன். அதற்கு விராடபத்ரன், "பொறுத்தன்றோ பழிதீர்க்க வேண்டும். காலமும் இடமும் கருமமும் கருதவேண்டாவோ. மணிவாளனோ இதற்குள் மன்னவன் செவியுள் ஜெபித்தாய் விட்டது. காலம் தாழ்ந்தால் நின் பெண்ணுடன் பண்ணிய மணமும் வீணேயாகும். ஆகையால் சீக்கிரம் வேந்தன்மாட்டுச் செல்வதே சிறந்தது," என்று ஓதியதற்கு இணங்கிக் கஜேந்த்ரஸிம்மனும் அவனுடன் மேன்மாடம் புகுதற்கேகினான்.

அரசன் விடுத்த மணிவாளனும் இச்சமயம் சித்ராங்கனிடம் வந்து அவனைச் சமாதானப்படுத்தி, "இளவரசே, நீ என் புதல்விக்கிழைத்த சதி சகிக்கற்பாலதன்று. எனினும் அப்பழியும் உனதன்றென்பது மறிவேன். ஆயின், என் மொழியையேனும் மதித்தருளி நிந்தனை பொருந்திய இம்மாறாட்டத்தைத் தவிர்ந்து என்னுடன் ஏகுவாய். இது நிமித்தம் நின் தந்தையும் ஆற்றாத் துன்பத்துள் ஆழ்ந்து மூர்ச்சித்துளர்," என விளம்பினன். இன்னது கேட்டதும் சித்ராங்கன் மிக வருந்தி, 'எனதாருயிர்த் தந்தை மூர்ச்சை போயினரோ," என்று குதிரையினின்றும் குதித்து விரைவின் அகல்வான் முன் பாண்மகள் தடுத்துநின்று "வள்ளலே, தஞ்சம். இக்கொடியோர் தம்மிடை எனைக்காவாது ஏகின் ஏழை என் கதி என்னும்," என விம்மினள். மணிவாளன், "மகளே, இளவரசைக் குறுக்கிடாதே" என அவளைக் கடியச் சித்ராங்கனோ, "உண்மையே, மாதவி, மறந்தேனுன்னை. மூர்க்கனும் கஜேந்த்ரஸிம்மனது கோபத்திற்கு ஆளாக்கியுள்ளேனே இப்பேதையை என் செய்வேன். தெய்வமே, என்னைத் தீண்டியவளுக்குங் கூடவா தீங்கடைய எழுதியிருக்கின்றாய்......இவளைக் காப்பது எவ்விதம்!" எனத் திகைக்கையில் அவன்முன் கலாநாதனே வந்து தோன்றினான்.

"கவசமாக்கும் கம்மியா, கலாநாதா, ஏது நீ இங்கும் வந்தது?" என்று சித்ராங்கன் வினவினன்.

"அரசே, இங்கும்......எனில்,......என்னை வேறு எங்கே தேவரீர் கண்டது!......நேற்றிரவு கருணாகரர் மனையைக் கொள்ளையிடத் துணிந்த பாதகரைத் தண்டிக்கும் காரியமாய்ச் சந்திரசேகரரிடம் சென்று வரலாயினேம். அப்பிரபுவும் எம்முடன் இந்நகர் போந்து எம்மிறைவனுக்குற்றதை யுரைத்து மீண்டதன்பின் நாற்சந்தி யொன்றில் இவ்வூரார் தொக்கனர். அங்குக் கஜேந்த்ரஸிம்ம மன்னவரது ஆட்கள் வந்து எம்மை நிந்தித்தகாரணத்தால் செருவிளைய ஓடினரைத் துரத்தி இம்மடத்துள் புக்கேன்!"

"நல்லது, கலாநாதா, நீ சமயசஞ்சீவி யாயினை. என் பொருட்டொருகாரியம் செய்வாயோ...இப்பாண்மகளை நீ பத்திரமாய்க் காத்து அழைத்துக் கொண்டுபோய் விடவேண்டும். இது செய்ய நீயே ஏற்றவன்."

இங்கு இவ்விதம் காலதாமதமாவது கண்ட மணிவாளன், "சித்ராங்கா, என் மகட்கே உரியதோர் பேறு இன்றிப் பெண் உன்னிடம் பெற்றாள்!" என்று சொல்லி வெய்துயிர்த்து மடத்தினுள் போய்விட்டான்.

கத்தியும் சண்டையுமானால் முன்பின் யோசியாமல் எதனிலும் தலையிட்டுக்கொண்டுவிடும் நம் கம்மியன் சந்தேகத்திற் காஸ்பதமான ஸ்த்ரீ சம்பந்தம் ஏற்றுக்கொள்ள இஷ்டப்படவில்லை. ஆகையால், "அண்ணலே, நுமக்குப் படைக்கலம் ஆக்குவேன், போரும் புரிவேன். இந்த முழந்தாள் மறையாத பாவாடைக்காரிக்கு ஊழியஞ் செய்யவோ யான் உடன்படேன்," எனத் திட்டமாய்ச் சொல்லிவிட்டான்.

"இதைக்கேள், கம்மியா. இப்பெண்ணைப்பற்றியெனக்கென்ன, உனக்கென்ன! ஏதோ சிறிது பரிவு நானவளுக்குக் காட்டிவிட்டேன். அதனால் கஜேந்த்ரஸிம்மன் வெஞ்சினங்கொண்டு அவளைக் கொன்றேவிடத் தன்னாள்களை ஏவியுளன். உயிர்க்குத் தவிக்கும் இப்பேதையைக் கைவிட்டு விடலாமா! அஞ்சியோரைக் காப்பதற்கிலதாயின் நின் ஆண்மையும் ஆண்மையோ!"

"ஆயிடின் ஐய, இக்கருமம் தலைநின்றேன்...சேலையைத் தானவள் சிறிது அடக்கமாய்ச் சுற்றியிருந்தாலோ...மற்று, இந்த அரம்பையை எங்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது?"

"எனக்குந்தான் தெரியவில்லை. நரபாலன் வீட்டிற்கு அழைத்துப்போ...இல்லை...உசிதமல்ல......எங்கேயாவது போ! நரகத்திற்கே வேண்டுமானாலும் கொண்டுபோய்விடு!"

"திக்கற்ற இப்பெண்ணை நரபாலனிடம் சேர்ப்பதைவிட நேராக அந்த நரகத்திற்கே அனுப்பிவிடலாமே. ஆனால் நரகத்திற்கோ எனக்கு வழிதெரியாது. தெய்வத் திருவருளை முன்னிட்டு அவ்விடத்திற்கு எந்நாளும் வழிவினவவேண்டி நேராதென்றும் எண்ணுகின்றேன்," என்றியம்பி மாதவியை அழைத்துக்கொண்டு அவளது நாயும் தொடரக் கலாநாதன் புறப்பட, இராஜகுமாரன் மடத்துச் சேவகன் ஒருவனை யழைத்து இவர்களுக்கிடையூறின்றி அந்தரங்கவழியாய் வெளியே சேர்த்துவிடக் கட்டளையிட்டுத் தந்தையிருந்த இடத்திற்கு விரைந்தேகினன்.

சித்ராங்கன் சொன்னவண்ணம் அந்தச் சேவகன், கலாநாதனையும் மாதவியையும் அந்தரங்கச் சுரங்கங்கள் வழியாய் மடத்திற்கு வெளியில் யாரும் அறியாமல் அழைத்துக் கொண்டுவந்து சேர்த்ததும் மறைந்துவிட்டனன். "மானத்திற்கஞ்சிப் பிழைக்கின்ற நான் இந்த நாடோடிப் பரத்தையுடன் தெருவழிச் செல்லப் பார்ப்போர் பற்பல சொல்லித் தூற்றுவரன்றோ! இச்செய்தி காந்தியின் காதிற்கெட்டினால் என்ன நினைப்பாளவள்!" என்று பலவாறு கலாநாதன் தன் மனத்துள் எண்ணினவனாய் மாதவியை நோக்கி, "ஏ, பெண்ணே, இனி, உன் வழியைப் பார்த்துக்கொள்," என இயம்ப, என்ன செய்வாள் பாவம் அவள், விம்மி விம்மிப் பெருமூச் செறிந்து வால் குழையத் தொங்கும் தன் நாய் முகத்தைத் தழுவிக் கொண்டு, "பைரவா, எங்கடா, நாம் போவது," என மீண்டும் விம்மலுற்றாள்.

"நீயும் உன் நாயும் எங்கேயாவது ஒழியுங்கள். போகின்ற இடந்தான் தெரியாமற் போனாலும், எங்கேயிருந்து வந்தாய் என்பதாவது தெரியுமல்லவோ! அவ்விடத்திற்கே திரும்பிச்செல்!" என்று கலாநாதன் வெறுப்பொடு விளம்பி அவளைத் தனிவிட்டு விரைந்து நடந்தான். நடந்த கலாநாதன் சிறிது தூரம் செல்வதற்குள் அந்நாய் அவனைப் பின்தொடர்ந்து உடையைப் பற்றி யிழுத்து, மாதவிக்குப் பரிந்து அழுவதாயிற்று. திரும்பிப்பார்த்தானவன். அவள் உணர்வற்றுத் தரையிற் சாய்ந்து கிடந்தனள். இதெல்லாம் கபட நாடகமோவென முதலில் அவன் சந்தேகம் கொண்டான். வழியில் போகும் ஆடவர்களை மோக வலைக்குட்படுத்தத் தன் நாயையும் பழக்கி வைத்திருக்கின்றனள் போலும், என்றெண்ணினனெனினும், கம்மியன் மனமும் இரும்பல்லவாகையால் தன்கை புகுந்த பெண்ணொருத்தி இந்நிலையில் இருப்பதவன் பொறுக்கவில்லை. "அடி, மாயாவி, எழுந்திரு பார்ப்போம்," என்று சொல்லிக் கொண்டே அவளிடம் சென்றவன் முகத்தைப் பொருந்தப் பார்த்ததும் அவள் அவசமுற்றது உண்மையே என ஓர்ந்தான். மாதவி தொடுத்திருந்த மலர்களை மெல்லென அகற்றி, அருகிருந்த வாவியினின்று நீர் கொணர்ந்து தெளித்து முன்தானையால் முகத்தில் விசிறி, அவன் பைதனிலிருந்த பழங்களைப் பிழிந்து அவ்விரஸத்தை ஊட்டி, இன்னபல செய்து, அவள் அடைந்த களையைக் கலாநாதன் தீர்க்க மாதவியெழுந்திருந்து நன்றிசொரிந்த நோக்கினளாய் நின்றிட்டாள். தன் காலில் விழுந்து குலவிப்புரளும் நாயினை விலக்கினவனாய்க் கலாநாதன் கூறுவான்.

"பெண்ணே, கேள், என்பாடு எவ்வளவு இக்கட்டுடையதாயிருக்கின்றதென்பதை எடுத்துச் சொல்கிறேன், கேள். இத்தினம் இரதிபௌர்ணிமி என்பதை நீ அறிவாய். இன்று நான் என் காதலிக் கருகிலாமல் போதுபோக்கும் புன்விதிய னாயினேன். காலையெல்லாம் போராய் முடிந்தது. பகலெல்லாம் வழக்கேயாயது. மாலைப் பொழுதையும் பழுதுபடுத்த நீ வந்துசேர்ந்தாய்."

"உத்தமியொருத்தி நீவரும் வழிமேல் விழிவைத்து வாடுவாளாயின் இங்குத் தாழேல். அன்றியும், என் மனம் நாடிய ஆசையும் இன்று ஒருவாறு கைகூடியிருக்கப் பிறாது காதற்கு இடையூறாய் எள்ளளவும் யான் இருக்க ஒவ்வேன். ஆதலின் ஐய, காதலுந்திய காலொடு விரைவாய்!"

"மற்று, நீ என்ன செய்வாய்?"

"நானா, தெய்வமேதுணையென என்கா லிழுக்கும் இடமெல்லாம் அலைந்து திரிகின்றேன்."

"திரிந்து......?"

"குண்டிலினியும் வறண்டதோ!"

"ஐயோ பாவம். பெண்ணே உண்மையைச் சொல். நீ வேஷத்தினாலன்றிப் பாண்மகளல்லள், பரத்தையுமல்லள். உன் காதலை யாவனோ கயவன் வஞ்சித்துப் பின் கைவிதிர்த்துளன். நீ சித்தம் சிதைந்து சந்தியில் வந்துவிட்டாய். நின்னை நிர்க்கதியாய் விடுத்துச் சென்றால் அவனிலும் கயவனே இங்கு நானாவேன்....உன் பேரென்ன...?"

"மாதவி,"

"நல்லது, மாதவி, வா, என்னுடன், என் வீட்டிற்கு வா. லோகாபவாதத்திற்குப் பயந்து யான் உறவில்லார்க்குப் புறங்கொடுக்கும் பாதகனாகேன்."

மாதவி அவனுடன் ஏக மனங்கொள்ளாது சிறிது தாழக் கண்டு கலாநாதன், "நாய் வந்தால் நீயும் தானே வருகின்றாய்," என்று கூறிப், "பைரவா, வாடா, என்னுடன்," என அந்நாயை அழைத்து வேகமாய் நடக்கப் பைரவனும் மாதவியின் பழப்பையை வாயில் கவ்வி எடுத்துக்கொண்டு அவளுக்கு முன் பாபரவென்று வாலை இடுப்பு வரையில் சேர்த்து ஆட்டிப் பின்புறம் சென்று அவள் கால்களை முட்டிமுட்டித் தள்ளிற்று. இதுகாணா மாதவி தன் துக்கத்தையு மறந்து புன்முறுவல் புரிந்தனள். "அடே, நாயே, அயலார்பின்னே ஓடுவதே உன் புத்தி," என்றதன் முகத்தைத் தடவி யழைத்துக் கொண்டு கலாநாதனுடன் நடப்பவளாயினள்.

அபவாதத்திற்கு அஞ்சேன் என்னச் சாற்றியே கலாநாதன் மாதவியை யழைத்துச் சென்றானெனினும் தெரிந்தவர் யாரும் வழியில் எதிரிடாதிருக்கத் தெய்வத்தைத் தன் மனத்துள் தொழுதனனாகிப் பெரிய வீதிகள் மூலமாய்ப் போகாமல், தூரம் சிறிதுகூடவே ஆவதும் கருதாது சிறிய இடைச்சந்துகளிலேயே போவதாயினன். ஆயினுமென்ன! யாதொன்று எதிர்ப்பட நாம்விரும்புவதில்லையோ அதுவே குறுக்கிட்டுப் புகுவது இக்கலியுகப் பெருமை போலும். அவன் சிறு தெருவொன்றைக் கடந்தகல்கையில் வைத்தியன் தாமோதரனே எதிரில் தோன்றினன். அன்னவனது கண்களிலிருந்தோ மறைவதற் கிடமில்லை. கலாநாதனுக்குக் கடுஞ்சினம் மூண்டது. 'இப்பழியஞ்சாப் பாதகன் அழிப்பான் என் பேரை' என மனந்துடித்தான். இதனின்று தப்பக் கலாநாதனுக்கு ஒரு உபாயம் தோன்றியது. 'என்னருகு அவன் வந்ததும், ஏதாவது வீண் வார்த்தை சொல்லிச் சண்டை வளர்த்து அது காரணமாய்க் கழுத்தைத் திருகிவிட்டால் அப்பொழுது அவன் வாய் அடைத்து விடுமல்லவா !" என்றெண்ணினன். அந்த மகாதந்திரி வைத்தியனு கலாநாதன் வாயில் கோல் கொடுப்பவன். ஒன்று மறியாதவன்போல் முகத்தை வைத்துக்கொண்டு, "கலாநாதா, சுகமோ. ஓகோ, உடன்வருவது உனது தங்கையோ ?" என்று சொல்லிக் கொண்டே தமோதரன் கடந்து சென்றுவிட்டான். கலாநாதனுக்கோ கோபம் பின்னும் பெருகியது. "எனக்குத் தங்கை யொருத்தி இல்லையென்பது அந்தப் பிணத்திற்கு நன்றாய்த் தெரிந்திருந்தும்......இருக்கட்டும், இருக்கட்டும்......உனக்கிருக்கிற இரண்டொரு பல்லையும் உன்னையே தின்னவைக்கிறேன். இரு... இரு !" என அவன் மறைந்த திசை நோக்கித் தன் முட்டியைக் குலுக்கிக்காட்டிக் கலாநாதன் மேல்நடந்தான்; வெகு தூரம் செல்லவில்லை. அதற்குள்,

எந்தவழி ஏகுவெனோ, தெரியவில்லையே,
புரியவில்லையே
தளுக்குதடீஇ மினுக்குதடீஇ, தளுக்குதடீஇ
மினுக்குதடீஇ
எந்தவழி ஏகுவெனோ, தெரியவில்லையே,
அடி, புரியவில்லையே.

என்று வெகு உல்லாசமாய்ப் பாடிக்கொண்டே தனஞ்சயனும் வந்து சேர்ந்தான். "இந்த ஓட்டைவாய்ச் சனியனும் வந்துவிட்டதே! ஐயயோ தெய்வமே, ஒன்றுவிடாமல் ஊரெங்கும் பறையறைந்து கெடுக்குமே, என மனங்கலங்குறும் கலாநாதன் தோள்களைப் பற்றி அத்தனஞ்சயன் குலுக்கி, "ஹ! ஹா! நண்ப, கையும் மெய்யுமாய்ப் பிடித்துவிட்டேன். போர்வீரர்க்குக் கவசம் ஆக்கும் நீயே மன்மதன் பாணத்திற்குத் தோற்றனையோ......ஹ! ஹ! ஹா!" என இடியிடியென நடுத்தெருவில் சிரித்தான்.

"இதோ பார், தனஞ்சயா, வாயை அடைத்துக் கொண்டு கண்களைப் பொத்திக்கொண்டு பேசாமல் போய்விடு. இங்குக் கண்டதை மாத்திரம் நீ யாரிடத்திலாவது மூச்சுவிட்டாயோ அதற்குப் பிறகு உனக்கு மூச்சில்லை. பத்திரம்," என்றனன் கலாநாதன்.

"நானு, கலாநாதா, நானு! இரகசியத்தை வெளியிடுவேன். பாஞ்சாலி பெட்டியுள் போட்ட பணத்தைப் போல் என் கண்பட்ட இரகசியமும் மறுபடி வெளிப்படாதே......இரு, இரு, கலாநாதா நானும் உன்னுடன் வீட்டிற்கு வந்தாலென்ன! இந்த இராகி இனிமையாய்ப் பாடுவாளென நினைக்கின்றேன். போர் இல்லாதபோது எனக்குப் பொருந்துவது பாட்டொன்றுதான்," என்று சொல்லித் தனஞ்சயன் உடன்நடக்க எத்தனித்தான்.

தனஞ்சயனை வெருட்டி ஓட்டுதற்குக் கைகண்ட மருந்து அறிந்த கலாநாதன், "ஆயின், வா. வழியில் போரும் தருகின்றேன். கஜேந்த்ரவிம்மனின் பரிவாரத்தினரொடு இப்பெண்பொருட்டுப் பகைகொண்டுளேன். அவரென்னை வழிமடக்கி அடர்த்தலும்கூடும். நீ துணையாய் வருதலும் நலமே, வா, வா", என்றனன். மறுவார்த்தையில்லை. "அப்படியானல், நான் போய் என் வாளை இதோ யெடுத்து வருகின்றேன்," என்று சொல்லிக்கொண்டே தன் குதிகாலைக் கும்பிட்டுத் தனஞ்சயன் ஓடி மறைந்தனன்.

இதன்பின் வேறுஎச்சம்பவமும் இன்றியே கலாநாதன் தன் வீடுவந்துசேர்ந்தான். சேர்ந்து, சிறிது இளைப்பாறி உணவருந்தித் தன்னைவளர்த்த தாயைக்கொண்டு மாதவியையும் உண்பித்து அவள் நாய்க்கும் சோறிட்டுப் பிறகு அவளைத் தன்னகத்துப் பின்கட்டில் படுத்துறங்க அனுப்பினன். மாலையும் தாழ்ந்து இரவு கூடிவிட்டதால் காந்திமதியின் மனைக்கு இனிப் போவதா விடுவதா என்று சிந்தித்தவனாய் முன்றிலில் உலவிய கலாநாதன் காந்தமிழுத்த இரும்பெனத் தன் காதலியின் வீட்டண்டை வந்துவிட்டனன். கதவு மூடியிருந்தது. தட்டினன். கருணாகரர் திறந்தார். "காலம் சிறிது தாழ்ந்துவிட்டேன்...எனினும்..." என்றனனாய் உட்புகக் கால் வைக்கையில் கருணாகரர் அவனை விலக்கி, "ஆம், ஆம்! மனதெல்லாம் உன் மனையிலே வைத்துவிட்டு இவ்வுடலைத்தான் சுமந்து வந்ததேன். போ!" என்று சினத்தொடு செப்பிக் கபாடத்தை யடைத்துக்கொண்டு போய்விட்டார். உயிரும் இழந்த உடலோடு மீண்டும் தன் வீடே வந்து அடைந்தான் ஏழைக் கலாநாதன்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

(முன் தொடர்ச்சி—பக்கம் 169)

தனிப்பாடல்கள்

உவமை.

கண்ணப்பர் கதையினை உள்ளுறைப் பொருளாகக் கொண்டு புனைந்துரைத்த பாடல்களைக் கண்டோம். இனி அவர் கதையினை உள்ளுறை அணியாகக் கொண்டு பாடுவாரது செய்யுள்களையும் சிறிது ஆராய்வோம். நம் நாயனாரது கதை உலகறிந்த தொன்றாகலின் இவர் கதையினை உவமையாகக் கொண்டு மற்றைய பொருள்களை விளக்கவருவார் பலர் ஆயினர். அறிந்தது கொண்டு அறியாததை அறிவிப்பதே உவமையின் உண்மைத் தொழிலாகும். அவ்வாறாயின் இவ்வடியார் அருங்கதையை அறியாதார் யார்? ஆகவே உவமையாதற்கு உரிமையுடையதே யாகும். மற்றும், "உள்ளுங்காலை உயர்ந்ததன் மேற்றே" என்று தொல்காப்பியர் கூறியபடி உவமையாக உரைக்கப்படும் பொருள் உயர்வுடையதாகவும் ஒளிர்தல் வேண்டும். அவன் கதையும் இவன் கதையும் ஆகாது சிவன் கதையேயாகித் திகழும் இவ்வன்பின் பெருங் கதையை உயர்ந்தனவற்றில் எல்லாம் உயர்ந்ததென உரையாதார் யார் ?

கந்த புராணம்:-கச்சியப்பர் தாம் பாடிய கந்தபுராணத்தில் நாட்டினைக் கூறவந்து, நாட்டினைநாடாக்கும் ஆற்றினைப் புகழத் தொடங்குகின்றார். ஆற்றினை ஆறாக்குவதும் மழையே யன்றோ. அம்மழையும் மழையாவது எதனாலே? அதனைக் கூறவந்த உயிர்நிலையான இடத்திலேதான் கண்ணப்பர் கதையை உவமையாகக் கூறுகின்றார். இறைவன் கதையைக் கூறவந்தவர், அதனைக் குறிப்பாக அறிவித்தற்கு இவ்வன்பின் அருங்கதையை அழகியதோர் உவமையாகக் கொண்டது பாராட்டற்பாலதாம். அந்நாட்டில் அவ்வாறு பாய்வதால் அன்பு பாய்வதைச் சொல்லவும் வேண்டுமோ ?—ஆறு பெருகி வழியும்படி மழை பொழியும் மூகிற் குழாங்கள் கடலின்நின்றும் நீர் முகந்துவந்து நந்தி மலைமேல் சொரிவதனைக் கண்ணப்பரது செயல்கொண்டு விளக்குகின்றார். வில்லும் கையுமாய் வரும் கறுத்த கண்ணப்பர் முகரியிலிருந்து வாயில் முகந்துவந்த நீரை சிவலிங்கத்தின் மீது திருமஞ்சனம் ஆட்டுவதுபோலக் கருமுகிற் கூட்டங்களும், வானவில்லொடு தோன்றி நந்திமலையின்மேல் கடலினின்றும் தம் வாயில் முகந்துவந்த நீரை அன்புடன் மலைகுளிரக் கொட்டுகின்றன என்கின்றனர்.

பூட்டு கார்முகந் தன்னொடும் தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங் கிரிமிசை உகுத்தல்
வேட்டுவக்குலத் திண்ணனார் மஞ்சனம் விமலற்(கு)
ஆட்டுகின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே.

என, வண்ணஉவமமும் வடிவஉவமமும் வினையுவமும் பண்புவமமும் பயனுவமும் வரப் பாடினர் பாடவல்ல பெரியார். அங்கும் ஒரு வில் இங்கும் ஒரு வில். வளைத்துவைத்திருக்கும் வில்—கொடியதே. ஆனல் இறைவன் மேல்வைத்த அன்பினல் ஆயது. அங்கும் கறுத்த திருமேனி இங்கும் கறுத்த வடிவம். இவரையும் இதனையும் காணக் கண் அஞ்சும். கெடுப்பதும் எடுப்பதும் இரு நிலையிலும் காணலாம். அதோடு நந்திமலையும் ஒரு சிவலிங்கந்தானே, அதனை நினைப்பூட்ட நந்தியங்கிரியை அதன் பெயரோடும் கூறினர். கடல் நீர் புயலினது வாயில் "ஊட்டுதண்புனல்" ஆயிற்று. கண்ணப்பர் வாயில் முகரி நீர் அந்தணர் தமது அன்பு நீரானதையும் உள்ளுறையாக உணர்த்திவிட்டார். மழையின்றி வற்றாந்தரையாக மாறிய மலை, மழை பொழிந்ததும் புல்லும் பூண்டும் விளையப்பெற்றுப் பச்சைப் பசேரெனப் பட்டாடை உடுத்தியதுபோல விளங்கி, இலையும் பூவுமாய்ச் செழித்தமரங்களோடு விம்மிதமாய்ச் செல்வத்தில் திளைத்துச் சிரித்து வாழ்வதுபோலச் சிவபெருமானும் அடியாரது அன்புநீர் பட்டதும் அளவிலா இன்பம் பெற்றனர் என்பதும் உணர்கின்றோம். இச்செய்யுள் தோண்டச் சுரக்கும் மணற்கேணி யாதலின் இவ்வாறே இன்னும் விரித்துரைத்துக் கொண்டே போகலாம். திண்ணனார் செய்த திருமஞ்சனத்தின் சிறப்பினை எல்லாம் இச்செய்யுளொன்றிலேயே தெளிவாகவும் சிறப்பாகவும் தேனூழுகவும் திறமையாகவும் புனைந்துரைத்தமை புலவரது பெருமையே யாகும்.

மருதவன புராணம்:—முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோலப் போற்றுவது மரபாதலினலே மருதவனப் புராண முடையார் கந்தபுராணத்திலிருந்து ஓரகப்பை அள்ளித் தமது நூலில் சுவைபடக் கலந்து கொண்டார்.

துங்க வெற்பினில் கருமுகில் சிலையொடும் துன்னி
பொங்கு தீம்புனல் சொரிதால் புரையுநீ டெழிலார்
எங்கள் காளத்தி இடத்திலோர் அன்பன்வாய் இருநீர்
சங்க ரன்திரு முடிமிசை உமிழ்ந்திடும் தன்மை.

என வருதல் காண்க. எனினும் கந்தபுராணம் கந்தபுராணந்தான். மருதவனபுராணம் மருதவன புராணம் தான். இனிமையைப்பற்றி எல்லோரும் அறிவர் ஆதலின் யாம் ஒன்றும் எடுத்துரைக்க வேண்டுவதில்லை. கொடுந்தொழிலைக் குறிக்கும் வில்லினை அன்பின் வழிப்பட்டு ஆண்டவனைக் காத்தற்கு வேண்டி அறுபது நாழிகையும் வளைத்தபடியே பூட்டி வைத்திருத்தல் இங்குக் குறிக்கப்படவில்லை. வானவில் முழுதும் வளைந்திருந்தால் தான் வனப்புடைத்தாய் கண்டோர் கண்ணைக் கவர்கின்றது. இவ்வியற்கை யழகும் இங்குக் குறிக்கப்படவில்லை. "பூட்டு கார்முகம்" இருந்த இடத்தில் வெறும் சிலைதான் விழுந்து கிடக்கின்றது. காற்றில் அலையுண்டு முகிற்குழாம் வந்து தோன்றும்போது நமது உள்ளம் உவக்கும் நிலையினை என்னென்று இயம்புவோம். உழுதொழில் செய்து அவ்வுவகையை உணர்தல்வேண்டும். அங்ஙனமே செடியும் புதரும் மரமும் காடுமாய் உள்ள மலையில் வருகின்ற கண்ணப்பர் அவற்றால் மறைபுண்டு பின் அருகில் வரவர வெளிவந்து பேருருவோடு தோன்றுதலும் கண்ணப்பர் கதையில் அழகுடையதோர் இடமாகும். அந்த அண்மை நிலையில் ஆண்டவன்மேல் வைத்த அன்பினல் அவரிடம் காணப்படும் பரிவும் பரபரப்பும் நினைவிற்கு வருகின்றன. இவ்வளவும் "தோன்றிய" என்னும் சொல்லில் உள்ள பொருள் ஆற்றலாகும். "துன்னி" என்பது அத்துணைச் சிறப்புடையதன்றே. "ஊட்டு தண்புனல்" என உயிரூட்டி உவக்கச்செய்யும் தன்மையையும் செந்தண்மை பூண்டொழுகும் பெருமையையும் எடுத்துரைத்தார் கச்சியப்பர். அதுவுமன்றித் திருமஞ்சனமாட்டியபோது உடல் குளிர்ந்ததைக் குறிக்கத் தண்மையையே கூறினர். வாய்க்குள் அடங்கிய நீராதலின் பொங்குதல் கூறவில்லை.

புனல் என்றதும் உண்பதை நினைத்துக்கொண்டு இனிமையைப் புகழத்தொடங்கிப் பொங்குதீம்புனல் என்கின்றார் மருதவன புராணமுடையார். முகில்வாயில் முகந்து வந்த நீரன்றோ! அதற்கேற்ப உகுத்தல் என்று சொல்வதே பொருத்த முடைத்து; சொரிதல் என்றாலோ முகிலை நினைந்து அதன் வாயை மறந்த கதையாக முடியும். கெடுக்குந் தன்மையையுடைய முகிலே கைதூக்கி எடுக்குந் தன்மையோடு வந்துளது என்பதைக் குறிக்க உவமையில் திண்ணனாரது வேட்டுவக் குலத்தினை நினைப்பூட்டினார் கச்சியப்பர். கண்ணப்பராவதற்கு முன்னுகத் திண்ணனாராக நின்ற நிலையையே உவமையாகக் கூறியதும் தகுதி உடையதேயாகும். மழை பொழிந்த பிறகு மலையும் நாடும் இன்புற்றநிலை கண்ணப்பரது வீட்டுநிலையோடு ஒக்கும். ஆனால் மழை பொழியத் தொடங்குகின்ற நிலையில் கண்ணப்பரைவிடத் திண்ணனாரே சிறந்த உவமையாவர். மருதவன புராண முடையார் இந்த இரண்டு நிலையையும் வேறுபடுத்தாது அன்பர் என்று கூறினார். என்றாலும் திருமஞ்சன மாட்டியது திண்ணனாராய்த் திகழ்ந்தபோதே ஆதலின் அன்பர் என்பதற்கு அவ்வாறே பொருள் கொள்வோமாக. மருதவன புராண முடையார் "இருநீர்" என்றும் "உமிழ்ந்திடும் தன்மை" என்றும் வேறு சுவைபடக் கூறுவர். கச்சியப்பர் தமது நோக்கத்திற்கேற்ப "மஞ்சனம் ஆட்டுகின்றதோர் தனிச்செயல்" என உவமையைச் சிறப்பித்துக் கூறுவர்.- நந்திமலையின் உடல் முழுதும் நனைந்ததுபோல இறைவன் உடன் முழுதும் குளிர்ந்தது என்பதை உணர்த்த வேண்டினாராகையால் மருதவனத்தார் போலத் திருமுடி யொன்றினையே எடுத்துக் கூறாது "விமலற் காட்டுவது" எனப் பொதுவாகப் புனைந்துரைத்தார். "நந்தியங்கிரி" என்பது போலத் "துங்கவெற்பு" என்ற சொற்றொடர் சிவலிங்கம் என்பதனைக் குறிக்கும் பொருளாற்றல் உடையதல்ல. இவ்வளவும் கூறியதால் தெய்வப்புலவர் திருமொழியில் ஒருசொல் மாற்றினும் பொருள் வேறுமாறி வெறும் மொழியாகும் என்பது தெளிவாகும்.

தியாகராஜ லீலை:—அறிஞர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களும் தமது தியாகராஜலீலை என்னும் இனிய நூலில் நாட்டின் நீர்வளத்தைச் சிறப்பிக்கத் தொடங்கி முகில்கள் உப்புநீரைக் கடலின் நின்றும் முகந்துவந்து பின்னர் நன்னீராகப் பெய்ய அந்நீர் கடலிற் சேருவதை அழகுறப் பாடவேண்டினார். உப்புநீரை முகில்களுக்குத் தந்து இனிப்பு நீரைப் பெற்றது கடல் என்றார். இதனை விளக்கக் கண்ணப்பரை உவமை காட்டினார். இழிவான இறைச்சியை இறைவனுக்கு ஊட்டிவிட்டு இறைவனிடமிருந்து இணையிலாப் பேரின்பம் கண்ணப்பரும் பெற்றாரன்றோ? சிறிது கொடுத்துப் பெரிது அடித்துப்போகும் வகையில் கடலின் செய்கையும் கண்ணப்பர் செய்கையும் ஒத்துள்ளன என்கின்றார்.

இழிதக இறைச்சி எச்சில் எம்பிரான் உண்ண நல்கி
அழிவில்பே ரின்பந் துய்த்த அன்பர்கண் ணப்பரே போல்

இழிதக உவர்நீர் எச்சில் எழிலிகள் உண்ண நல்கி
அழிவிலின் சுவைய நன்னீர் அருந்திய தாழி மாதோ

என்றார். எம்பிரான் என இறைவனது பெருமையைச் சுட்டினார். அத்தகையவர் இறைச்சி - அதிலும் இழிதகைய பன்றி இறைச்சி - அதிலும் எச்சில் இறைச்சி உண்டார்.என்! ஆண்டவன் வேண்டிய அன்பு அங்குண்டு. கண்ணப்பர் அன்பர் என்ற மறைபொருளையும் வெளியிட்டார். "கருங்கடல் என்னநின்ற கண்படா வில்லியார்" என்று சேக்கிழார் புனைந்துரைத்தார் ஆதலினால் அன்பில் அழியாரன அடியாரை ஆழிக்கு உவமை கூறுதலும் பொருத்தமுடையதேயாகும். முகில்களின் உயர்வைச் சுட்டவேண்டி அவற்றின் எழுச்சியைக் குறிக்கும் எழிலி என்ற சொல்லைப் பொறுக்கி எடுத்தார். எழுச்சியையுடையது இங்கே கடல் மட்டத்திற்கு இழிந்தது. அக்கடல் நீரோ உவர்நீர். அதிலும் நீச்சு நாற்றம் உடைய நீர். அகத்தியன் விட்ட சிறு நீராகிய எச்சில் நீர். அவ்வாறாயின் அதை உண்ணுவான் ஏன்? அதுதான் ஆழி. அதுதான், எழிலிவேண்டிய நீர் அகப்படும் பெரு நீர்நிலை.

பெருந்துறைப் புராணம்:—இப்பெரியாரே திருப்பெருந்துறைப் புராணத்தில் நாட்டின் ஐந்திணையையும் ஐந்திணை மக்களையும் பழைய வழக்கப்படி பாடவந்தார். வேடரைப் புனைந்துரைக்கத் தொடங்கி அவர்கள் செயலை விரித்துரைத்தார். கொலையும் புலையும் கள்ளும் மடமையும் கூறினார். ஆனால் கண்ணப்பருக்குப் பின் இன்னோர் செயலை எம்மனோர் இகழ்தலாகுமோ என்று அவர்களையும் உயர்த்தித் தாம் கூறவந்த நாட்டையும் சிறப்பித்தார்.

"கடமை பன்றிமான் முதலிய மிருகவூன் கவர்ந்து
சுடர்கொ ளுந்தழற் காய்ச்சுபு தேனிற்றோய்த்தருந்து
மடமை என்னெனக் கிராதரை இகழவா யுண்டோ
படவ ராவணி காளத்தி யார்செயல் பார்த்தும்"

என்று பாடுகின்றார். இஃது நேரே உவமை கூறியதல்ல எனினும், நாட்டு வளத்தை விரித்துரைக்கும் வகையில் மற்றைய வற்றோடு இயைபுடைமையின் இடைப்பிறவரலாக இங்கேயே கூறினோம்.

குற்றலப் புராணம்:—இழுமெனும் அருவிபோலத் தங்கு தடையின்றி ஓடும் திருக்குற்றாலப் புராணம் பாடிய திரிகூட ராசப்ப கவிராயர் அப்புராணத்தின் முதலில் அவையடக்கம் கூறுகின்றார். இறைவனே மிகப் பெரியவன். பெரியோரால் புகழப் பெற்றவன். அவரது புராணத்தைப் பாடத் தொடங்கிய யானோ புழுவினும் சிறியேன். எனினும் என் புன்சொல்லும் அவனுக்குகந்த பொன் சொல்லாகும். எங்ஙனம்? முன்னொரு நாளில் கண்ணப்பனாரது எச்சிலையும் அமிழ்து எனக் கொண்டாடி உண்டான் அன்றோ? அங்ஙனமே என் குறை சொல்லும் அவனுக்கு நிறைசொல்லாகும்.

கவையடி விலங்கின் வல்லூன்
  கண்ணப்பர் கனிவாய் எறி
அவிகளின் அமிழ்தின் மிக்கா
  அமலனுக் கானற் போல
குவிதரு நெறியொன் றில்லென்
  குறைமொழி நிறைசொல் மேலோர்
செவிபுகிற் றிரிகூ டத்துச்
  செல்வனுக் கினிய தாமால்

இழிதகையதாகிய இறைச்சி கண்ணப்பர்வாயிற் புகுந்ததால் தூயதாகியது; என் புன்சொல்லும் பெரியோர் செவி புகுந்தால் தூயதாகும். கனிவாய் என்று கண்ணப்பர் வாயைச் சிறப்பித்தமை காண்க. அவியினை உவமை கூறியதைப் பெரியபுராணத்திலும் காண்கின்றோம்.

திருவாரூர்ப் புராணம்:—கண்ணப்பர் கதையின் உயிர்நிலை எதுவோ அதனை எடுத்து உவமையாகக் காட்டினர் திருவாரூர்ப் புராணம் உடையார். ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவர் பெரியார் என மரபில் வழங்கிவரக் காண்கின்றோம். கல்வியில் அனந்தன் என்றும், வனப்பில் மாரன் என்றும் அரச முறையில் மனுச்சோழன் என்றும், செல்வத்தில் குபேரன் என்றும் எல்லோரும் பேசிக்கொள்கின்றனர். இந்தக் கோவையில் உள்ளாரோடு கண்ணப்பரையும் தனிப்பெருஞ் சிறப்புடையவராகக் கலக்கப் பார்த்துவிட்டவர் இப்புராண முடையவரேயாகும். அன்பில் கண்ணப்பர் என்று வழக்கிற் கொணர்ந்து ஒரு மரபினை நிலைநாட்டினார். "கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்" என அடிகள் கூறி இருந்தாலும் மரபாக வழங்கி வரும் இக்கோவையில் கண்ணப்பர் பெயரையும் புகுத்தி விட்ட பெருமை நமது புராண முடையாரையே சேரும்.

"மாரவேள் வனப்பில் நீதி
  மாட்சியில் மனுவின் மைந்தன்
வீரவண் சிறப்பில் மேக
  மிகுபெருங் கொடையில் முக்கண்
கார்தவழ் கண்டன் அன்பில்
  கண்ணப்பன் நிதிக்கோன் செல்வத்
தார்தரு கல்வி தன்னில்

"அனந்தனென் றகில மேத்த" என்று புதியதோர் உவமையை வழக்கில் கொணர்ந்த அருமை பாராட்டற்பாலதாகும். சேக்கிழார் பாடிய கதை இல்லையாயின் இவ்வுவமைவந்தே இராது என ஒருதலையாகக் கூறலாம்.

T. P. மீனாக்ஷி சுந்தரன்.

தமிழ்ப் பாடம் 10.

நள வெண்பா

(167-வது பக்கத் தொடர்ச்சி)

சுயம்வர காண்டம்.

மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
யென்னுடல் சொல்லென்றா ளீங்கு. 34.

பதப்பிரிவு:—மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற அன்னம் போய் கன்னி அருகு அணைய நல்நுதலும் தன் ஆடல் விட்டு தனி இடம் சேர்ந்து ஆங்கு அதனை என் நாடல் சொல் என்றாள் ஈங்கு.

அன்வயம்:— ஈங்கு நாடல் என் சொல்? என்றாள், என நான்காம் அடியை மாத்திரம் மாற்றிப் படித்தால் அன்வயம் ஆகும்.

பதவுரை.

மன்னன் - நளமகாராஜன்
விடுத்த - அனுப்பின (அந்த)
வடிவில் - அழகிலே
திகழ்கின்ற - விளங்குகின்ற
அன்னம் - அன்னமானது
போய் - (விதர்ப்ப நாட்டிற்கு) போய்
கன்னி - தமயந்தியினது
அருகு - சமீபத்தில்
அணைய - சேரவே,
நல் - நல்ல
நுதலும் - நெற்றியையுடையவளாகிய தமயந்தியும்
தன் - தன்னுடைய
ஆடல்-(தோழியருடன் ஆடியிருந்த)விளையாட்டை
விட்டு - விட்டுவிட்டு
தனி - தனியான
இடம் - ஒரு இடத்திற்கு
சேர்ந்து - (அன்னத்தை) அழைத்துச் சென்று
ஆங்கு - அவ்விடத்தில்
அதனை - அவ்வன்னத்தை (பார்த்து),
"ஈங்கு - இவ்விடத்திற்கு
நாடல் - (நீ) வந்தது
என் - என்னத்திற்காக
சொல் - சொல்வாய்,"
என்றாள் - என்றாள்.

விரிவுரை:—அன்னம் வந்ததென்றால் அதைக் கண்டவுடன் தமயந்தி, விளையாடிக்கொண்டிருந்த தோழியர்களை யெல்லாம் விட்டு ஒருவரும் இல்லாத ஒரு தனியிடத்திற்கு அந்த அன்னத்தை அழைத்துக்கொண்டு போய்ப் பிறகு அவள் அதை, "நீ வந்த காரியம் என்ன சொல்" என்று கேட்டா ளென்பது வியப்பைத்தருவதாயிருக்கின்றது ஒவ்வொரு நாளும் இந்த அன்னம் வேறுவேறு நாடுகளுக்குப்போய் அவ்வந்த அரசர்களைப் பார்த்து வந்து தமயந்தியினிடம் இன்னார் இன்னார் இப்படிப்பட்டவர் என்று சொல்லிவருவதும், அவள் யாவும் கேட்டு 'எனக்குத் தகுந்த நாயகன் அவனல்லன், வேறு தேசம் போய்ப்பார்' என்று அனுப்புவதும் வழக்கமாயிருந்ததோ யாதோ! இந்த இரகசியம் தமயந்திக்கும் அன்னத்திற்கும் பலநாட்களாக நடந்து வராமற்போனால் இன்றைக்கு மாத்திரம் வந்ததும் வாராததுமாய் அதை நாலுபேர் முன்னிலையில் கேட்காமல் தனித்த இடம் சேர்ந்து கேடபானேன்! பிடிபட்ட அன்னம் நளனால் தனக்குத் தீங்கு இல்லையென்று பயம் தீர்ந்ததும், தன் கையில் வைத்திருந்தவொன்றை எடுத்துத்தருவதுபோல், "உனக்குத் தகுந்த மணட்டி தமயந்தியே" என்று தனது பொறுப்பிலேயே தைரியமாய் உரைத்ததும் இப்படி எண்ணுவதற்கு ஆதாரமாகின்றது. நளனை விட்டுப் புறப்படும்போதும், 'அவளை உனக்கு விவாகம் செய்து வைக்கின்றேன்' என்றிது துணிந்து வாக்களித்ததும், தமயந்தி தனக்கு நாயகனாக வரவேண்டியவனுடைய இலக்ஷணங்களை எல்லாம் அன்னத்தினிடத்தில் சொல்லியிருக்க, அவ் விலக்ஷணங்கள் யாவும் இவனிடத்தில் அமைந்திருக்கக் கண்டவுடன், இவனை யவள் ஏற்றுக்கொள்வாளெனும் நிச்சயத்தால் நேர்ந்ததா யிருக்க வேண்டும்.

இது மாத்திரமல்ல. வந்த அன்னத்தைத் தமயந்தி தான் விளையாட்டையும் விட்டுத் தனிஇடம் அழைத்துப் போய் 'இப்பொழுது என்ன சமாசாரம்' என்று கேட்டாளென்றால், அன்னம் என்ன மறுமொழி தருகின்றது. தான் நிடதநாடு போனதும் அங்கே பிடிபட்டதும் பயங் கொண்டதும், பிறகு நளனோடு பேசியதும் ஆகிய வரலாறு ஒன்றும் சொல்லவில்லை. உடனே அடுத்த பாட்டில் நளனை வருணித்து அவன் பேரையும் சொல்லி, 'இவனே யுனக்கு நாயகனாவான்' என்று விளம்புகின்றது. சங்கேதப்படி போய்வந்த ஒரு அந்தரங்க தூதனுக்கு இவ்வாறு சொல்வது பொருந்துமேயல்லாது புதியதாய் நிகழ்ந்த ஒரு விஷயத்தைச் சொல்பவர் வேறு விதமாய்ச் சொல்வது இயற்கை. இவைகளைக் கேட்ட தமயந்தியும், "அன்னமே, என் ஆவியை நீ அளித்தாய்" என்று பின் வாழ்த்துகின்றதும் மேற்காட்டிய கருத்தை ஒருவாறு புலப்படுத்துகின்றது.

குறிப்பு :—மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற அன்னம், என்ற வாக்கியத்தில் விடுத்த திகழ்கின்ற இரண்டும் பெயரெச்சங்கள். பெயரெச்சம் என்பது எதற்குப் பெயர் என்று மறந்து போயிருப்பீராஞல், முன் பாடங்களில் சொல்லியிருப்பதை மறுபடி பார்த்துக் கொள்ளவும். வா, போ, நில், உண், பார் என்பன போன்று ஒரு காரியத்தை (அதாவது வினையை) செய்யச் சொல்கின்ற பதங்கள் வினைச்சொல் எனப்படும். இந்த வினைச்சொல் குறிக்கின்ற காரியத்தை முடிவாகக் காட்டினுல் அப்பொழுது வினைமுற்று. வந்தான், போவான், நிற்கின்றேன், உண்பார்கள், பார்த்தது, இவைகளெல்லாம், வருவது போவது நிற்பது உண்பது பார்ப்பது ஆகிய காரியங்களை முன்னுலேயோ இப்பொழுதோ இனிமேலோ முடிவடையும் நிலையில் காட்டுவதால் அவை வினைமுற்று (முற்றுதல் - முடிதல்) ஆகின்றன. ஆனுல், வந்த போகிற நிற்கும் உண்டு பார்க்க, என்றே, வா போ நில் உண் பார் என்பன போன்ற ஒரு காரியத்தைச் செய்யச் சொல்கிற பதங்களை ஆதாரமாகக் கொண்டு பிறந்த வார்த்தைகள் நின்று விடுமாஞல், அந்தக் காரியம் முடிவுபடத் தோன்றவில்லை யல்லவா! இவைகளும் காரியஞ் செய்கின்ற சம்பந்தமாக வந்த சொற்களாதலால் வினைச்சொற்களே. ஆனுல் காரியத்தின் முடிவு தோன்ருதபடியினுல் அவை எச்சங்கள் எனப்படும். முடிந்த வினைச்சொல் முற்றுவினை, முடியாத வினைச்சொல் எச்சவினை. எச்சம் என்ருல் குறைவு என்பது ஒரு அர்த்தம். இந்தக் குறைவு, வாக்கியத்திலே இருக்கின்ற வேறுபதங்களைக்கொண்டு பூர்த்தியாகவேண்டும். அப்படி அர்த்தத்தைத் தொடர்ந்து பூர்த்திசெய்து வைக்கக்கூடிய மற்றப் பதம் வினைச்சொல்லாக இருக்குமாஞல், இந்த எச்சவினைக்கு வினையெச்சம் என்று பெயர். அல்லது பூர்த்தி செய்கின்ற பதம் பெயர்ச்சொல்லா யிருக்குமாஞல் அந்த எச்சவினைக்குப் பெயரெச்சம் என்று பெயர் வினைச்சொல்லைக் கொண்டு போய் முடிந்தால், அந்த எச்சவினைக்கு வினையெச்சம் என்றும், பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகின்ற எச்சவினைக்குப் பெயரெச்சமென்றும், கொண்டு முடிகிற காரணத்தால் பெயர் வந்தன. ஆனுல், வினையெச்சம், பெயரெச்சம், இரண்டும் வினைச்சொற்களே. பெயரெச்சம் என்றிருக்கிறபடியினுல் அது பெயர்ச்சொல்லென்று நினைக்கப்படாது. பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகிற எச்ச வினையே பெயரெச்சம்.

பெயர்ச்சொல் என்ருல் என்ன வென்பது யாவருக்கும் தெரியும். ஒன்றின் பேரைக் குறிக்கின்ற சொற்கள் பெயர்ச் சொற்கள். பெட்டி மரம் நாய், இவைகளெல்லாம் பொருளின் பெயர்களாதலால் பெயர்ச் சொற்கள். பொருளின் பெயராகத்தான் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. அது ஒரு பேராக இருக்க வேண்டும், அவ்வளவுதான். அழகு, சிவப்பு, உயரம், இவைகளெல்லாம் பொருளின் பேரல்ல, ஆனுல் குணங்களின் பேர்; ஆகையால் பெயர்ச் சொற்களே. அப்படியே, கொலை, பேச்சு, ஓட்டம், என்பன போன்ற சொற்கள், பொருளின் பேருமல்ல, குணத்தின் பேருமல்ல ; ஆனுல் ஒரு காரியத்தின் பெயர், ஆகையால் அவைகளும் பெயர்ச் சொற்கள். காரியம் செய்வதைப் பற்றிச் சொன்னுல் அப்பொழுது வினைச்சொற்களாகி விடும். கொன்ருன், பேசினேன், ஓடுகின்றது என்று வந்தால் வினைச்சொல். அந்த அந்தக் காரியத்தின் பெயரைச் சொல்கிற கொலை பேச்சு ஓட்டம், போன்ற பதங்கள் பெயர்ச் சொற்கள். ஒன்றன் பெயரில் குறைவும் முடிவும் இருக்கமாட்டாதாதலால் முற்றுப்பெயர் எச்சப் பெயர் என்று இலக்கணத்தில் இல்லை.

எச்சவினைகள் வாக்கியத்தில் உள்ள வேருெரு வினைச் சொல்லையாவது (அது, வினைமுற்ருகவாவது வினையெச்சமாகவாவது பெயரெச்சமாகவாவது இருக்கலாம்) அல்லது பெயர்ச் சொல்லையாவது அர்த்தத்தில் கொண்டுமுடியும். அர்த்தத்தில் கொண்டுமுடிகிற பதத்தைத்தான் வாக்கியத்தில் எங்கிருந்தாலும் தேடிப்பார்த்துத் தீர்மானம் செய்யவேண்டும். அர்த்தம் பொருந்திஞலும் பொருந்தாமற் போஞலும் பக்கத்தில் வருகிற வார்த்தையை எடுத்து முடித்துக்கொண்டுவிடப்படாது.

இந்தப்பாட்டிலே யிருக்கிற வினைச்சொற்களை உதாரணமாய்ப் பார்ப்போம் :—

விடுத்த :—அனுப்பவதாகிய காரியத்தைக் குறிக்கின்றபடியினுல், இது வினைச்சொல். ஆனுல் முற்று வினையா, எச்சவினையா? விடுத்த, என்று தனியாய் நின்ருல் முடிவாகவில்லையே, ஆகையால் எச்சவினை. ஆயின் பெயரெச்சமா, வினையெச்சமா? மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற அன்னம்போய், என்ற வாக்கியத்தில் விடுத்த என்பதை அர்த்தத்தில் எது தொடர்கிறது? விடுத்த வடிவு, என்று சேர்த்தால், அனுப்பின அழகு, என்கிற அர்த்தமே யிராதே. மன்னன் அழகையா அனுப்பிஞன்? இல்லையே. ஆகையால் விடுத்த அன்னம் என்று, அர்த்தத்தில் அன்னம் என்பதையே கொண்டுமுடியும். அன்னம், ஒருபொருளின் பேர் அல்லவா? ஆகையால் அது பெயர்ச்சொல் ; விடுத்த என்ற எச்சவினை அன்னம் என்ற பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகின்றபடியால் பெயரெச்சம்.

திகழ்கின்ற :— இதுவும் அன்னம் என்பதைக் கொண்டு முடிகிற பெயரெச்சம். திகழ், என்ருல் விளங்குகின்ற காரியத்தைச் செய்யச் சொல்வது. வருகின்ற பையன் என்பதைப்போல், திகழ்கின்ற அன்னம், என்ருயிற்று. திகழ்கின்ற என்பதுஃ பெயரெச்சந்தா னல்லவா !

விடுத்த. திகழ்கின்ற, என்ற இரண்டு பெயரெச்சங்களும் அன்னம் என்ற ஒரே சொல்லைக் கொண்டு முடிகின்றன. அரசன் அனுப்பினதும் அழகோடு விளங்குவதுமான அந்த அன்னம், என்று பொருள் கூடும்.

போய் :—இது வினையெச்சம், அணைய என்னும் மற்ெருரு வினையெச்சத்தைக் கொண்டு முடிகிறது.

அணைய :—இந்த வினையெச்சம், விட்டு என்ற வினையெச்சத்தைக் கொண்டு முடிகிறது.

விட்டு :—இந்த வினையெச்சம், சேர்ந்து என்ற வினையெச்சத்தைக் கொண்டு முடிகிறது.

சேர்ந்து :—என்னும் வினையெச்சம் என்ருள் எனும் வினைமுற்றைக் கொண்டு முடிகிறது.

இந்தப் பாட்டில் வினையெச்சம், இன்னெருரு வினையெச்சத்தையும் அல்லது வினைமுற்றையும் கொண்டு முடிவதற்கு உதாரணங்கள் இருக்கின்றன. ஆனுல் வினையெச்சம் பெயரெச்சத்தைக் கொண்டு முடிவதற்கு உதாரணம் காணவில்லை. ஓடிவந்த பையன் இடறி விழுந்து அழுதான். என்ெருரு வாக்கியம் அமைத்துக் கொள்வோம். ஓடி, என்பது வினையெச்சமல்லவா. அது வந்த என்ற பெயரெச்சத்தையும், இடறி என்ற வினையெச்சம், விழுந்து என்ற இன்னெருரு வினையெச்சத்தையும், விழுந்து என்ற வினையெச்சம் அழுதான் என்ற வினை முற்றையும் கொண்டுமுடிய இவ்வாக்கியத்தில் எல்லா உதாரணங்களும் இருக்கின்றன.

வினையெச்சத்தின் பொருள்கள் காரணம் காரியம் உடனிகழ்ச்சி யென்று மூன்று இருக்கின்றன வென்றும், எச்சங்கள் உடன்பாடாகவும் எதிர் மறையாகவும்

இருக்கலாமென்றும், அவைகளின் உருவமும், முன்னுல் பட இடங்களில் காட்டி யிருக்கின்றேன். அவைகளையும் இதனேடு சேர்த்துப் படித்துக்கொண்டு மனதூன்றி விஷயத்தைக் கற்று நினைவினில் நிறுத்திக் கொள்ளவும். இன்னும் நான் புணரிலக்கணம் தொடரிலக்கணம் இவைகளைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அதற்கு ஆதாரமாக இவைகளும் இன்னும் சில விஷயங்களும் முன்னதாகத் தெரிந்திருக்க வேண்டிய தவசியம்.

நன்னுதல்:—இது நல் + நுதல், என்று பிரியும். நல்-நல்ல, நுதல் - நெற்றி. எனின், நல்நுதல் தன் ஆடல் விட்டு, என்றதற்கு இருக்கிறபடி பார்த்தால், நல்ல நெற்றி தன் விளையாட்டைவிட்டு என்றல்லவோ அர்த்தமாகும். அப்படி ஆகப்படாது. நெற்றியா விளையாட்டை விட்டு விட்டது! ஆதலால் நல்நுதல், என்றதற்கு இங்கு, நல்ல நெற்றியை உடையவள், என்று சொல்லவேண்டும். செய்யுளில் அடிக்கடி இவ்விதம், உறுப்பு ஆபரணம் பூமாலை முதலியன, அவைகளை உடைய பெண்ணிற்குப் பதிலாய் வரக்காண்பீர். முன், 20 வது, செய்யுளில் (129-வது பக்கம்) இலங்கு இழை, என்றது; பிரகாசிக்கின்ற ஆபரணங்களை அணிந்த பெண்கள் என்றும் ; 22-வது செய்யுளில் (130 பக்கம்) வார் கோதை என்றது நீண்ட மாலையை அணிந்தவள், என்றும் இந்த நல்நுதல் என்பது போலவே வந்திருக்கின்றன. இப்படி வருகின்ற தொடர்களுக்கு அன்மொழித் தொகை, என்று பெயர். இந்தப் பேரை மாத்திரம் இப்பொழுது நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இலக்கணத்தைப் பின்ெருரு வேளை பார்ப்போம்.

செம்மனத்தான் றண் ணளியான் செங்கோலான் [மங்கைடர்க

டம்மனத்தை வாங்குந் தடந்தோளான்— [மெய்ம்மை

நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கா

னுளனென்பான் வேந்த னுனக்கு. 35

பதப்பிரிவு:—செம்மனத்தான் தண் அளியான் செம்கோலான் மங்கையர்கள்தம் மனத்தை வாங்கும் தட தோளான் மெய்ம்மை நளன் என்பான் மேல் நிலத்தும் நால் நிலத்தும் மிக்கான் உளன் என்பான் வேந்தன் உனக்கு.

பதவுரை.

செம் - செம்மையாகிய
மனத்தான் - மனதையுடையவன்,
தண் - குளிர்ந்த
அளியான் - கருணையை உடையவன்,
செம்கோலான் - செங்கோல் செலுத்துபவன்,
மங்கையர்கள்தம் - மாதர்களுடைய
மனதை - மனதினை
வாங்கும் - கவரும்படி
தட - விசாலமான
தோளான் - தோள்களையுடையவன்,
மெய்ம்மை - வாய்மையுடைய
நளன் - நளன்
என்பான் - என்று சொல்லப்படுவன்,
மேல் - மேலேயிருக்கும்
நிலத்தும் - தேவலோகத்திலும்
நால் - நான்குவகையான
நிலத்தும்-(குறிஞ்சி முல்லைமருதம் நெய்தல் என்ற) நிலப்பிரிவுகளையுடைய பூமியிலும்
மிக்கான் - சிறந்தவன் (ஒருவன்),
உனக்கு - உனக்கு
வேந்தன் - தலைவனுவதற்கு
உளன் - இருக்கின்ருன்
என்பான் - என்று சொல்லும் பொருட்டு......
(இங்கு நாடினேன்.)

கருத்து:—இது அன்னத்தினுடைய வார்த்தை. முன் பாட்டிலே தமயந்தி 'என் நாடல்' என்று கேட்டதற்கு இது உத்தரம். நளனை வர்ணித்து "இப்படிப்பட்ட ஒருவன் உனக்கு நாயகஞகத் தகுந்தவன் இருக்கின்ருன் என்று சொல்லவே......" என்று அன்னம் வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்திவிட்டாலும், 'நான் இங்கே வந்தேன்' என்று முடித்துக் கொள்ளவும். 'நீ எதற்காக இங்கே வந்தாய்?' என்று ஒருவனைக்கேட்டால், அவன், "என் அண்ணனுக்கு நாளை விவாகம் என்று சொல்ல" என நிறுத்திவிடும் வழக்கமுண்டு. சொல்ல, என்னும் வினையெச்சம் கொண்டு முடிகிற வினைமுற்று 'வந்தேன்' என்பது கேள்வியை ஒட்டி மறைந்து நிற்கிறது. அப்படியே இங்கேயும், தமயந்தி 'என்நாடல்?' என்று வினவியதற்கு, 'இத்தகைய நாயகன் உனக்கு இருக்கின்ருன் என்றுசொல்லும் பொருட்டு'......என்று அன்னம் நிறுத்தியது.

குறிப்பு :—1. இந்தப்பாட்டில் என்பான் என்னும் பதம் இரண்டுஇடத்தில் வந்திருக்கின்றது. முதல், 'நளன் என்பான்' என்றபோது நளன் என்னப்படுபவன், என்னும் அர்த்தத்தில் வந்திருக்கிறதென்பது சுலபமாய்த் தெரியும். ஆனுல் 'உளன் என்பான்' என்ற மற்ற இடத்தில், என்பான் என்பது வினையெச்சம். உருவத்தில் அது வினைமுற்று மாதிரி இருக்கிறது. ஆனுல் அர்த்தத்தில் வினையெச்சம். உளன் என்ன வந்தேன், என்று ஆகும். என்ன என்பது செய்ய என்பதுபோல் ஒரு வினையெச்சமல்லவா! அவை என செய என்றுகூட வருவதில்லையா! அப்படியே என்பான் செய்வான் பேசுவான் போன்ற உருவங்களும் சாதாரணமாய் வினைமுற்ருய் வந்தாலும் ஒவ்வொரு சமயங்களில் வினையெச்சமாகவும் வரும். ஒரே உருவத்தில் பதங்கள் வெவ்வேறு பொருளில் வருவதை முன் 51-வது பக்கத்தில் காட்டியிருக்கின்றேன். இவன் நாளைக்கு என்னைக் காண்பான், என்ற வாக்கியத்தில், காண்பான் என்பது வினைமுற்று. இனி, 'நாளை என்னைக் காண்பான் வருவான்' என்ருல், காண்பான் - காண, வினையெச்சம். பசு புல் மேய்வான் சென்றது. இங்குப் பசுவை மேய்வான் என்று சொல்லலாமோ எனக் கலங்காதீர். மேய்வான், வினையெச்சம், மேய அல்லது மேயும் பொருட்டு. வினையெச்சங்கள் மூன்று விதமான பொருள்களில் வரலாம் என்று முன்னே(52-வது பக்கம்) சொல்லியிருக்கிறேன். என்பான், செய்வான், உண்பான், போலப் பான் வான் என்று முடிகிற வினையெச்சங்கள் 'நெல் விளைவான் (விளைய) மழை பெய்தது' என்பதைப்போல் காரியப் பொருளில் வரும். அவைகளை விரித்தால் என்னும் பொருட்டு, செய்யும் பொருட்டு என்று விரியும்.

2. நால் நிலம் :—இந்தப் பூமிக்கு நால்நிலம் என்று பெயர் வந்ததன் காரணத்தை 24-வது பக்கத்தில் காணலாம். நால் நிலம், என்றவரையில் நாலுவிதமான நிலங்கள் என்றுதான் அர்த்தம். ஆனுல் நாலுவிதமான நிலங்களையுடைய உலகம் என்று பொருள்படுவதால், நானிலம் என்றதொடரும், இலங்கிழை வார்கோதை நன்னுதல் என்பனபோல், அன்மொழித்தொகை.

188993

கம்ப ராமாயணம்

பால காண்டம்

3. நகரப் படலம்.

அணியன்றி யரணன் றயோத்திமா மதிலே.

'கோசல தேசத்தினது காட்சிகள் இவையிவை காண்மின்,' எனக் காட்டினராய் வழியழைத்துச் செல்கின்ற நம் கவித்துணைவரைக் 'காண்பதற்குரியன யாவும் யாம் கண்டாகிவிட்டதோ' என வினவின் அவர், 'சாலும் வார்புனல சரயுவும் பல காவிஞேடியும் கண்டதில்லையே,' என்று நகையெய்துவார். முற்றிலும் காண்பதற்கரிய தன்மை ஒருபுறமிருக்கக் கம்பர்தான் இருப்பனயாவும் கண்ணுற்காணும்படி காட்டிவைக்க இசைவரோ! வித்திடுநிலமும் வழிபடுகோயிலும் எவ்விடத்திலேனும் நமது கண்களிற் பட நேர்ந்திடுமாயின் பின் அவர் கட்டிவைத்த கருத்தனைத்தும் சிறிது கலக்கமெய்துமே! கலை வளரு நெஞ்சினர் புரியுங் காரியம் இத்தகைத்து. இருப்பன யாவற்றையும் பற்றி எழுதி வைப்பது கலையின் திறமல்ல. அது புகைப்படத்தின் தொழில். உள்ளனவற்றுள் சில ஓர்ந்தமைத்து மற்றவெல்லாம் நம் மனோபாவத்திற் கேற்பப் பூர்த்தியடையும்படி விட்டுவிடுவது கலைவல்லவர் பழகிய தந்திரம். ஆதலால், சரயுவும் கண்டதில்லை என்றொரு 'சாக்கு'க் கூறி இந்நாட்டுப்புறத்தில் இனி நாம் திரிந்துலவா வண்ணம் தலைநகராகிய அயோத்திக்கு நம்மை விரைந்தழைக்கின்றார். அழைப்பது கம்பரானாலும், அவ்வள நாட்டின் பெருவனப்பை விடுத்தகல இசையாது அரைமனதோடு தொடர்கின்றோம் என்பதை நம்முகக் குறியாலுணர்ந்து, செல்கின்ற அயோத்தியின்பால் நமக்கு உற்சாகம் உதிக்கவேண்டுமென்றும், வார்த்தை வளர வளர வழி குறுகுமென்பது பிரயாணத்தின் அனுபவமாதலாலும், நாடுமந் நகரத்தின் நன்னலப் பெருமைகளைப் பாராட்டிப் புகுவது இயல்பே.

"வழித்தோழ, நாமேகு மிந்நகர் எத்தகையதென மதித்தனை?"

செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளில்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூல்
முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுல கத்தோர் யாவருந் தவஞ்செய்
தேறுவா னுதரிக் கின்ற
அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி
புரிகின்ற தயோத்திமா நகரம்.

[அழகும் இனிமையும் சேர்ந்த நல்ல பொருள் நயத்தோடு, அதற்கேற்ற சிறப்பும் கூர்மையும் பொருந்திய மதுரமான சொல்நயமும் வாய்ந்த கவிகள் அனைவரும், சமஸ்கிருத சாஸ்திரம் வல்ல முனிவர்களும் புகழ்ந்த நகரம் அது. அதுவன்றி, எந்தெந்த உலகத்திலிருப்பவர்களும் தவங்களைச்செய்து ஏறவிரும்புவது தெய்வலோகம். அந்தத் தேவர்களே இறங்கிவந்து தங்குதற்கு ஆசையை விளைப்ப தப்பா, அயோத்திமா நகரம்.]

"ஆதலால், அங்கு நீ யெய்துதற்குச் செய்த பாக்கியம் சிறிதல, விரைவின் நட," என்றனர்.

வர்ணிக்கப்பட்ட அயோத்தியைப் பார்க்கிலும் வர்ணித்த அவர் வாக்கையேபற்றிப் பெரிதும் சிந்திக்க நேர்கின்றது. கம்பருக்கேன் இவ்வளவு பக்ஷபாதம்! வடநூல் முனிவர், என்று பிரித்துவிட்டபடியால், கவிஞர் என்றது தமிழ்க்கவிகளைத்தான் குறித்து நிற்றல் வேண்டும். எனின் தமிழ்க்கவிகளுக்குச் சிறப்படை மொழிகள் எழுகொடுத்தவர் நாவில், வடநூல் முனிவருக்கு ஒன்றில்லாமற் போயிற்று, பாவம்! சொல்நயமும் பொருள்நயமும் தமிழிற்கேதானோ. வடமொழிக்கில்லையோ! கம்பருக்கு வடமொழிப் பயிற்சியில்லை, பயின்றதமிழையே பிறிதொடு மாறுபடக் கொண்டாடுகின்றார் போலும். வான்மீகி மகாமுனிவனின் நூலினைப் படிக்கக் கேட்டே தன் இராமாயணத்தைப் பாடக் கற்றவர் இவர். நன்றிகெட்ட பூனையோடு தன்னை அவையடக்கத்தில் ஒப்புக்கூறியது தக்கதே யாயிற்று.

இன்னவாறு எழுந்த எண்ணங்களினிடை யாழ்ந்தவராய் உடன்நடக்கும் நாம், உரைத்தவர்க்குப் பதிலுரை மொழிய வேண்டுமெனும் நேர்மைநோக்கி, "ஆயின் எந்நகர் போன்றது இந்நகர்" என வினவியவுடன் கம்பர், "அதற்கு அதுவே உவமை?" என்று கூறிச் சிறிது நகையும் விளக்குமாறு விளம்புவார்:

உமைக்கொரு பாகத் தொருவனு மிருவர்க்
கொருதனிக் கொழுநனு மலர்மேல்
கமைப்பெருஞ் செல்வக் கடவுளு முதலோர்
கண்டிலா நகரது காண்பான்
அமைப்பருங் காதன் முன்பிடித் துந்த
அந்தரஞ் சந்திரா தித்தர்
இமைப்பிலர் திரிவ ரிதுவலா லிதனுக்
கியம்பலா முவமைமற் றியாதோ.

[உமையாளைத் தன் பாகத்திலுடைய பரமசிவனும், வள்ளி தெய்வயானைகளுக்கு நாயகனான முருகவேளும், தாமரைமலரில் பெருமையோடமர்ந்த பிரம்ம தேவனும், இவ்வயோத்திக்கு நிகரான நகரொன்று காண்பதற்கு முயன்று தேடியும் இதுகாறுங் கண்டிலர். அவ்வாறிருக்கச் சூரியனும் சந்திரனும் தாமொன்று கண்டுபிடிக்க ஆகாயத்தில் கண்ணுங்கொட்டாது அநாதிகாலமாய்த் திரிகின்றார், கண்டீர். அயோத்திக்கு உவமை அயோத்தியே யல்லாது வேறு ஒன்று இருத்தல் கூடுமோ]

மாதினை யொருபுறத்து வைத்தவர் சிவபிரான். இருவர் மனைவியர் இருபுறத்திலும் முருகக் கடவுளிற்கு அமைந்துளர். அண்டகோளகைக ளடங்கலும் அயோத்திக்கு ஒப்புத்தேடித் தந்தையும் அவன் தனி மைந்தனும் சிறிது ஓய்வரோவெனின், அருகிருக்கும் அவர் மனைவியர் ஓயவிடார். விநோத மெங்கெங்கு உளதென்று இடைவிடாது திரிகின்ற இயற்கை மாதர்பால் சிறிதளவு மிகுந்துளதென்பது கம்பர் கருத்துப்போலும். ஆதலால் சென்றவிடமெல்லாம் அமையாது அப்பாலும் சென்ற வண்ணமா யிருக்குமாறு ஏவுகின்ற மாதரும் இணைபிரியாதிருக்க இந்நகர்க்கு நிகரொன்று உளதாயின் அதனை இந்நாள்வரை இவர் கண்டிரா திருத்தல் இயலுமோ. அவ்வாறாக, ஞாயிறும் திங்களும் தாம் காண்போமென வீணே திரிகின்ற பேதைமை பெரிது! நான்முகன் வரையில் அவன் தேவியை உடன் சேர்க்காது உரைத்ததே தகும். கலையின் திறமுணர்ந்தோர் நாடோடிக் கால்பாயார். ஆதலின் அவன் நாவிலே இருப்பவளானாலும் ஊர்திரியத் தூண்டுபவள் அவளல்லள். ஈசற்கும் முருகற்கும் இயன்ற தூண்டுகோல் இக்கடவுளுக்கு நேர்ந்திடாவிடினும், ஊர்சுற்றித் திரிவோர்க்கு இன்றியமையாத பொறுமையும் செல்வமும் அமையப் பெற்றிருப்பதால் இவனும் எங்கெங்கும் நாடியிருப்பான் என்பது ஒருவாறு பெறலாம்.

இவ்விதமாகச் சந்திர சூரியர் நெடுவானில் இடைவிடாது நடப்பதற்கு ஓர் சம்பந்தம் அயோத்தியின் பெருமையோடு கற்பித்து உயர்வுநவிற்சியணி அமையக் கூறிய கம்பரின் உரையைக் கருத்துட் கொண்டு சிந்தனையி லாழ்ந்தவராய் இருந்ததால் 'அளகாபுரியும் அமராவதியும் அயோத்திக்கு நிகரல்லவோ' என்று கேட்டு நாம் அக்கவியைத் திகைக்கும்படி செய்யாமற் போனோமே என்று கழிவிரக்கம் எய்துதற்கும் இடம் ஏற்படாது. ஏனெனில் அடுத்த செய்யுளிலே, "இவ்வயோத்தியைப் படைப்பதற்கு முன், பயிற்சிபெற்றுக் கைதேருமாறு நான்முகன் அமைத்துப் பார்த்த நகரங்களல்லவோ அவ்விரண்டும்" எனச் சாதித்து விட்டார். இனி என்ன செய்வது. மறுக்க இயலாவகை ஒருவன் ஒன்றை நாட்டினால் பிறகு அதை ஏற்றுக் கொள்வதே தகுதி. ஆதலால் அவரை நோக்கிப் "புலவீர், நும்முரை போற்றினேம், அமைப்பி னழகிலும் செல்வச் சிறப்பிலும், இணையிலாநகர் இவ்வயோத்தி......" என்று நாம் சொல்லி வருகையிலே அவர், அழகினாலும் செல்வத்தினாலும் மாத்திரமே அயோத்தியை நாம் பாராட்ட ஒருவாறு உடன்படுகின்றோம் என மதித்து, "அவ்விரண்டாலும் மாத்திரமன்று, இன்பத்திலும் அது வென்றுளது; போகபூமி வேறொன்று மேலுலகத்தில் இதனினும் மிகுந்துளது என்றெண்ணற்க" என்பவராய்:

புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க
மென்னுமீ தருமறைப் பொருளே
மண்ணிடை யாவ ரிராகவ னன்றி
மாதவ மறத்தொடும் வளர்த்தார்
எண்ணருங் குணத்தி னவனினி திருந்திவ்
வேழுல காளிட மென்றால்
ஒண்ணுமோ விதனின் வேறொரு போகம்
உறைவிட முண்டென வுரைத்தல்.

[புண்ணியங்கள் பல செய்தவர் எய்தும் இடம் மோக்ஷம் என்பது வேதசாஸ்திரங்கள் சொல்கின்ற விஷயம். ஆனால் இப்பூவுலகில் இராகவனளவு தவங்களையும் தர்மங்களையும் செய்து வளர்த்தவர் வேறு யார். நம்மால் எண்ணுவதற்கும் அடங்காத நற்குண சம்பன்னனான அவன் இனிது அமர்ந்து ஏழு உலகங்களையும் ஆளும் இடம் இவ்வயோத்தி யென்றால், போகங்கள் பொருந்திய இடம் வேறொன்று இருக்கின்றது எனச் சொல்லவும் கூடுமோ!]

சொல்வீர் எனத் தகைவார். இதைக்கேட்ட நாம் எது நினைக்கின்றோம் என்று மனந்தடவு கண்களால் நோக்கி முன்சொன்னதையே வற்புறுத்த மீண்டும்வேறு வார்த்தைகளால் கேட்கின்ற கேள்விக்கு விடை நாடுவ தரிது.

தங்குமா பொருளுந் தருமமுந் துணையாத்
தம்பகைப் புலன்களைத் தவிர்க்கும்
பொங்குமா தவமும் ஞானமும் புணர்ந்தோர்
யாவர்க்கும் புகலிட மான
செங்கண்மால் பிறந்தாண் டளப்பருங் காலம்
திருவின்வீற் றிருந்தமை தெரிந்தால்
அங்கண்மா ஞாலத் திந்நக ரொக்கும்
பொன்னக ரமரர்நாட் டியாதோ.

[எய்தியபின் ஒருநாளும் செல்லாமல் தங்கியிருக்கின்ற கல்விப்பொருளும் தருமமும் தமக்கு உதவியாகக் கொண்டு, பகையாகிய இந்திரியங்களை விலக்குகின்றதற்குரிய மிகுந்ததவமும் அதனால்வரும் ஞானமும் எய்தியுள்ள முனிவர் யாவர்க்கும் தஞ்சமென அமைந்த திருமாலே பிறந்து ஆண்டு கணக்கற்ற காலம் திருமகளோடு இங்கு வீற்றிருந்தானென்றால், இப்புவியிலுள்ள அயோத்தியை ஒக்கும் நகர் பொன்னகருடைய தேவலோகத்தில் தான் ஏதென்று எண்ணுவீர்?]

சிற்றுயிர்க் குற்றதுணை கல்வி யலதில்லை யாதலால் அதனைக் கம்பர் மா பொருள் என்றனர். கல்வியின் பயிற்சியால் நிகழ்கின்ற ஒழுக்கம் தருமம். கல்வியும் அதனோடு நிகழ்கின்ற தருமமும் இவையிரண்டும் ஒருவனது மெய்வாழ்க்கைக்கு ஆதாரமாகின்றன. அம்மெய்வாழ்க்கை வாழ்வதுதான் தவம். இந்தத் தவத்தினால் எய்தும் பயன் ஞானம் அல்லது அண்டங்களும் அவைகளுக்குள் இருப்பன யாவும் ஒன்றேயெனும் மெய்யறிவு. அவ்வறிவு எய்தியவர் தமக்குத் தஞ்சமென அடைவதும் திருமால். அன்னான் இந்நகர் வந்திருந்து ஆட்சி செலுத்தினான் என்றபின் பிறிதோர் நகர் இதற்கிணையென் றியம்புதல் எவ்வாறு இயலும்! என்னும் இவ்வுரையி லடங்கிய நுண்மைப் பொருள்களை நினைத்துக்கொண்டே நடக்கையில் அயோத்திமா நகரைச் சூழ்ந்த மதிலும் நமது கண்களுக்குத் தென்படுகிறது.

அம்மதிலின் உயரத்தினை அண்ணாந்து பார்த்து முடிவு காணாமல் "எத்துணை உயரமோ இது?" என்று வினவினீராயின், முன் அயோத்தியைத் தானே நிகர் தனக்கு என்னும்படி பொதுநீங் குவமையால் சிறப்பித்தது போலவே இங்கும் "உயர்வினோடு உயர்ந்தது என்னலாம் பொன்மதில் நிலையே" என்று சித்திரம் பேசிவிடுவர் நம் கம்பர். மலைகளை உதாரணமாய்ச் சொல்லலாம் என்றாலோ, நான்கு சதுரமாக விதிப்படி கட்டிய மலையொன்றும் இயற்கையி லில்லாதபடியினால் பொதுவாய அவ்வுவமை இம்மதிற்குப் பொருத்தமாகாது. ஆதலால் உயரம் உயரம் என்ற தன்மை எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாம் இம்மதில். உயரம் என்ற பண்பை ஒரு பொருளின்மேற் சாற்றுது உயரம் என்பதே எத்துணை உயரம் என்று நினைத்து நினைத்துப் பார்த்தாலும் கருத்தினுள் வரையறுத்துக் கொள்ள ஒண்ணாது. அதுபோல் இம்மதில் கண்ணிற்கும் ஆயது.

உயரத்திற்கோர் உவமை சொல்ல இயலாதாயினும் அம்மதலின் வேறு சில தன்மைகளை உவமை வாயிலாக விளக்குவார்:

மேவரு முணர்வு முடிவிலா மையினால்
வேதமு மொக்கும் விண்புகலால்
தேவரு மொக்கு முனிவரு மொக்கும்
திண்பொறி அடக்கிய செயலால்
காவலிற் கலையூர் கன்னியை யொக்கும்
சூலத்தாற் காளியை யொக்கும்
யாவையு மொக்கும் பெருமை யாலெய்தற்
கருமையா லீசனை யொக்கும்.

[முடிவு இதற்கு எங்குளது என்று உணரவும் இயலாமையால் இம்மதில் வேதத்தை ஒக்கும். விண்ணிற்குள் புகுவதால் அது தேவரை ஒக்கும். வலியமைந்த பொறிகளை (இந்திரியங்களை) தம்முள் அடக்கி வைத்திருக்கின்ற முனிவர்களைப்போல் மதிலும் வலியமைந்த பொறிகளை (எந்திரங்களை) தன்னுள் அடக்கியிருப்பதால் இது அம்முனிவர்களை ஒக்கும். நகரைக் காக்கின்ற தன்மையில் அது துர்க்கையை ஒக்கும். சூலங்களைத் தாங்கி யிருப்பதால் காளியை ஒக்கும். யாவையும் அது பெருமையால் ஒக்கும். எளிதிலே யாரும் அதை எய்த முடியாதலால் ஈசனையுமே ஒக்கும்.]

விண்புகுந்தது என்ற கம்பர், என்ன நோக்கத்தால் இம்மதில் தேவலோகத்தை எட்டிப் பார்த்ததென்று சொல்பவராய், அதனிற்குட்புறம் வசிக்கின்ற மாதர்தம் அழகினைக் கண்ணிற்குக்காட்டுவதன் முன்னமேயே ஒருவாறு பாராட்டி வைக்கின்றார்:

பஞ்சிவான் மதியை யூட்டிய வனைய
படருகிற் பங்கயச் செங்கால்
வஞ்சிபோன் மருங்குல் குரும்பைபோற் கொங்கை
வயங்குவே யமைந்தமென் பணைத்தோள்
அஞ்சொலார் பயிலு மயோத்திமா நகரி
னழகுடைத் தன்றென வறிவான்
இஞ்சிவா னோங்கி யிமையவ ருலகங்
காணிய வெழுந்தொத் துளதே.

[சந்திரனுக்குச் செம்பஞ்சு ஊட்டியதுபோல் படர்ந்த நகங்களோடு கூடிய தாமரையன்ன பாதங்களும், கொடிபோன்ற இடுப்பும், தென்னங் குரும்பை போன்ற முலைகளும், விளங்குகின்ற மூங்கிலைப்போன்ற தோள்களும், அழகிய சொற்களையும் உடைய மாதர் நடமாடும் அயோத்திமா நகரத்தளவு அழகு தேவலோகத்திற்கு இருக்கின்றதோ இல்லையோ என்று சோதித்தறியும் பொருட்டு அம்மதில் வானத்தைநோக்கி ஓங்கி எழுந்தது போன்றிருக்கின்றது.]

அழகின் தாம்பார்க்கக் கற்சுவரும் பழகியுள்ளது அயோத்திமா நகரில்.

முன்செய்யுளில் இம்மதில் விண்புகுந்த தென்றதற்கு இச்செய்யுளில் காரணங்காட்டிய கம்பர் பின்செய்யுளில் அது அடக்கியுள்ள பொறிகளும் எவையென எடுத்தியம்புகின்றனர். அவைதாம் மிகவும் அபூர்வமானவை.

சினத்தயில் கொலைவாள் சிலைமழுத்தண்டு
சக்கரந் தோமர முலக்கை
கனத்திடை யுருமின் வெருவருங் கவண்கல்
என்றிவை கணிப்பில கொதுகின்
இனத்தையு மூவணத் திறையையு
மியங்குங் காலையு மிதமல நினைவார்
மனத்தையு மெறியும் பொறியுள வென்றால்
மற்றினி யுணர்த்துவ தெவனோ.

[கோபம் கொதிக்கும் கைவேல், கொலைபுரியும் வாள், வில், எரி இரும்பு, கோடரி, கதாயுதம், சக்ராயுதம், எறிவேல், உலக்கை, மேகத்திடை உண்டாகும் இடியைப் போல் அச்சம் விளைக்கின்ற கவண், என்பனபோன்ற கணக்கில்லாத யுத்த ஆயுதங்கள் அந்த மதிலின்கண் வைக்கப்பெற்றிருந்தன. இவையன்றிச் சில எந்திரங்களும் இருந்தன. அவை, கொசுவினைய நுண்ணியவற்றையும், மிகவும் உயரப் பறக்கவல்ல பருந்தையும், எங்கும் நுழையக்கூடிய காற்றையும், மற்று இரகசியமாய் விரோதம் பாராட்டுகின்ற மனத்தையும், வெட்டும் திறம் வாய்ந்தன வென்றால் வேறு பல சொல்லுவானேன்.]

முடிவிற்சொன்ன யுத்த எந்திரம், எல்லாம் வல்ல இந்நாள் போரிலும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அரசனுக்கு இதம் நினைக்காதவர் மனதைத் தாமே யறிந்து துண்டிக்கவல்ல பொறியொன்று இந்நாளிருக்குமானால் அதைவிட ஆபத்து வேறு வேண்டாம். கச்சியப்ப சிவாசாரியாரும், "இகழும் நாவையும் மனத்தையும் எறிந்திடும்" பொறிகளைத்தன் மனத்தால் கட்டிய மதிலுள் அமைத்து வைத்தார். இருப்பினும் கச்சியில் எவரும் ஊமையரானதில்லை.

இத்துணைக்காவலா இவ்வயோத்திமா நகரிற்கு! இருக்கும் எந்திரங்களின் பேரைக் கேட்கின்றபோதே மனதினில் அச்சம் எழுகின்றது. கொசுமுதல் பருந்து ஈறாகப் பறப்பன யாவற்றிற்கும் பயந்தே தயரதன் வாழவேண்டி நேர்வதேன். காற்று மூட்புகாமல் காக்கவும் வேண்டுமோ. நன்மை நினையாதார் பலர் இருப்பரென்று எண்ணுவதும் இயல்போ! பார்க்கப்போனால், கோட்டைகொத்தளங்கள் திண்மையாகவும் சேனையின் பலம் மிகுதியாகவும் அமைத்துக் கொள்கின்ற அரசனுக்குப் பெருமையில்லை. செங்கோலின் நடுநிலை தளரத்தளரவே சேனையின் தொகையும் வளரவேண்டி நேரும். அதுவன்றி அவன் எந்நாளும் பகைவருக்கு அஞ்சியஞ்சி ஆண்டு வருகின்றானென எண்ணுவதும் இயல்பாம். எனின், மதிலினை வருணிக்கின்ற ஆர்வத்தில், 'தனுவன்றித் துணையில்லான் தருமத்தின் கவசத்தான் மனுவென்ற நீதியான்' எனக் கோசிகாதிய முனிவரர் போற்றும் தயரதமன்னனிற்கும் அவன் முன்னோர்க்கும் இழுக்கு வந்தடையாவண்ணம் கம்பரும் அவனை விரைந்து காப்பவராகி,

பூணினும் புகழே யமையுமென் றினைய
பொற்பினின் றுயிர் நனிபுரக்கும்
யாணரெண் டிசைக்கு மிருளற விமைக்கு
மிரவிதன் குலமுத னிருபர்
சேனையுங் கடந்து திசையையுங் கடந்து
திகிரியுஞ் செந்தனிக் கோலும்
ஆணையு நடக்கு மாயினு நகருக்
கணியென வியற்றிய தன்றே.

[கவசங்களணிந்து தன்னைக் காத்துக்கொள்வதிலும் பெற்ற புகழே தனக்கு உற்ற காவலாய் அமையும், என்பது போன்ற கொள்கைகளால் விளங்கின்று அவன் அளிக்கின்ற நலம்வாய்ந்த எட்டுத் திசைகளிலும் பயம் வறுமை பாபங்கள் ஆகிய இருள் நீங்கும்படி ஒளிர்கின்ற சூரியகுல அரசர்களது சக்கிரமும் செங்கோலும் ஆக்கினையும், ஆகாயத்தையும் திசைகளையும் கடந்து அப்பாற் செல்கின்றதாதலால், (மதிலரண் முதலிய மிகையன்றோ வென்று நினைப்பீராயின்—ஆம் மிகையே, ஆயினும்) நகருக்கு அழகு என்றே கட்டப்பட்டிருக்கின்றன]

என்று எயிலின் செய்தியை முடித்தனர். நகரொன்றிருந்தால் மதிலொன்று அதற்கு அமையவேண்டும் என்னும் தொன்றுதொட்டு வருகின்ற முறைமையை நோக்கியும், அழகிற்காகவும் மதில் அமைந்திருந்ததேயல்லாமல் பகைவர்க்கு அரண் என்று எழுந்ததில்லை.

T. N. சேஷாசலம்.

மதிப்புரை.

ஸ்ரீமான்களான வி. ராமசந்திர நாயுடு, சு. வி. கனகசபைப் பிள்ளை, இவர்களை ஆசிரியராகக்கொண்ட சமரசமார்க்கம் என்னும் மாதப்பத்திரிகையைக்காணப் பெரிது மகிழ்கின்றோம். உலகத்திலே என்னுடைமை நின்னுடைமை என்று யாவரும் எதிர்வழக்கிட்டு நிற்கும் இந்நாளில், மேலாய பொருள்களிடத்தில் மனதைச் சிறிது நேரமாயினும் செலுத்திவைக்கச் செய்யும் எவ்வித முயற்சிக்கும் அறிஞர் நல்வரவுகூறுவர். இப்பத்திரிகை திவ்யஞானத் தாரக சபைகளின் சார்பாய் நடைபெறுகின்றது. இச்சபையின் தலைவராய் உலககுருவாக உற்பத்தியானவருமென அச்சபையோர்களால் கொண்டாடப்படுகிற ஸ்ரீ கிருஷ்ணாஜியின் உபந்யாசங்கள் பல எம்பார்வைக்கு வந்திருக்கிற பகுதியில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. அன்னார் பற்பலபோது உரைத்துள அறமொழிகளும் ஆங்கிலத்தோடு தமிழிலும் இதனில் விளங்குகின்றன. இவையாவும் ஊன்றிப்படித்துப் பார்த்தோம். டாக்டர் பெஸண்ட் அம்மையார் அவரைப் பற்றி ஒரு பத்திரிகைப் பிரதிநிதிக்குக் கூறியவைகளையும் படித்தோம். யாவரும் எங்கும் பல்வேறு வகைகளில் பாடுபட்டு முயன்றாலும் முடிவினில் எய்துவதற்கமைந்த இன்பநிலையாதென ஸ்ரீ. கிருஷ்ணாஜி விளக்கித் தருகின்றார். இவர் உலககுருவானவிதம் யாதெனத்தெரியாதவர்களுக்குப் பெஸண்டம்மை சொல்லியிருப்பதைப் படித்துப் பார்த்தபின் விஷயம் நன்றாக விளங்கும்.

இப்பத்திரிகாசிரியர்களை, உலகத்தின் பயன்கருதி நாம் கேட்டுக்கொள்வ தொன்றுளது. 1926. வருஷம் ஹாலண்டில் ஸ்ரீ கிருஷ்ணாஜி செய்த பிரசங்கத்தின் சாரம் எதுவென ஆராய்ந்தால், "நாமெல்லாம் வேற்றுமை நினைவொழித்துப் பிறர்க்குப் பலவிதத்திலும் பயன்பட வேண்டும்" என்றும் "பற்றற்ற சிந்தையராகி நித்திய ஆனந்தத்தை எய்தவேண்டும் எனும் நோக்கத்தோடு பல துன்பங்களுக்கு இடமான இவ்வுலக வாழ்க்கையில் வாழ்வதற்கு வழி தேடிக்கொள்ளவேண்டும்" என்றும் தெரியவருகின்றது. இது வொன்றும் உரையளவில் புதுமையல்ல வென்ற படியினாலேயே அவர் கூற்றில் மெய்மை இல்லையென்று நாம் காட்டவரவில்லை. ஆனால் இம்மெய்யினை அறியாதாரும் நம்பாதாரும் இவ்வுலகில் வெகு சிலரே என்பதை யாவரும் மறுத்திடார். அவ்வாறாகப் பெரியோர் வாய்நின்றும் நூல்கள் மூலமாயும், ஒவ்வொரு சமயம் தமது சுய அனுபவத்தினின்றும் கூட, இத்துணைத் தத்துவம் அறிந்துள்ள எண்ணிறந்தோர் அவ்வழி நடக்காமல் பின்னும் பின்னும் துன்பத்திற்கு ஆளாகி வருகின்ற விபரீதத்திற்குக் காரணமும், அறிந்துள மெய்யினையும் நமது வாழ்க்கையோடு இயன்றதாக்கிக் கொள்ளும் வகையும், ஸ்ரீ கிருஷ்ணாஜி எப்பொழுதேனும் விரித்துரைத் திருப்பாராயின் அதனையும் தம் பத்திரிகையில் மொழிபெயர்த்தமைப்பது படிப்பவர்க்குப் பின்னும் பயன்தரும். விதிவிலக்குகளால் மாத்திரமே மனிதனின் மனமானது உண்மை நெறி படர்வது உலகத்திற் காணவில்லை யாதலால், விதியும் விலக்கும் அறிவிற்கு எட்டியதோடு நில்லாது மனதிற்கும் கட்டுப்படுவதற்கு உண்டான மார்க்கத்தையும் உடனுக்குடன் சொல்லிவைப்பது சிறந்ததாகும்.

இப்பத்திரிகையில் வழங்குகின்ற தமிழ் நடையை மிகவும் பாராட்டுகின்றோம். ஆங்கிலத்திலிருந்து ஒன்றை மொழிபெயர்த் தெழுதுவது சுலபமல்ல. எனினும், இங்குக் காணும் மொழி பெயர்ப்புக்கள் யாவும் தெளிவோடு செவிக்குஇனிமையாகவும் வாய்ந்திருக்கின்றன. ஆசிரியர்களது ஊக்கத்தையும் தமிழ் வன்மையையும் தேர்ந்தமைக்கும் கட்டுரைகளையும் யாவரும் கொண்டாடுவர். ஆனால், இலக்கணப் பிழைகள் கணக்கில்லாமல் எங்கெங்கும் இப்பகுதியில் காணச் சிறிது வருந்துகின்றோம். பிழையென்பது மனிதருக்கு இயற்கையேயானாலும் முயற்சியால் அவைகளைக் குறையச் செய்வது தக்கது. இலக்கணப்பயிற்சி யுடையவர் உதவியால் இவ்விதப் பிழைகளை எளிதில் நீக்கிக் கொள்ளலாம். கார்யாலயம் திருவல்லிக்கேணி. வருஷ சந்தா ரூபா 1.

அகப்பொருள் வரலாறு.

(76 வது பக்கத் தொடர்ச்சி)

பாங்கியிற் கூட்டம்.

தன் மனத்திறைகொண்ட மாணிழையாளைக் காணவும் நெருங்கிக் கூடிப் பழகவும் பெறாது, காமன்கையம்பால் நாளெல்லாந் தோளெல்லாம் புண்ணாகி மெலிந்த பொய்யுடல் கொண்டு இப்பாழுலகில் வாழும் பயனற்ற வாழ்விலும் உயிர்துறந் தொழிவதே நலமென்று துணிந்த தலைமகன் மறுநாட்காலையில் எழுந்து, தன் உயிர்த் தோழனாகிய பாங்கனை நாடிச்சென்று கண்டு, முன்னாள் தான் பாங்கியையுற்றுப் பலவாறு குறையிரந்து நின்றும் அவள் சற்று மிணங்காது தன்னை மறுத்தகற்றியதை அவனுக்குரைத்து, அவளிசைந்தாலன்றித் தனக்கினித் தலைவியின் கூட்டம் நேராதெனவும், அவளையின்றித் தன்னுயிர் நிலையாதெனவுந் தெளிந்து தான் உயிர்விடத் துணிந்ததையும் அவனுக்கு உணர்த்தினான். அதைக்கேட்டுப் பாங்கன் "கல்வி அறிவு நிரம்பிய மாமதியோய்! சென்றவிடத்தெல்லாம் மனதைச்செல்லவிடாது தீதொருவி நன்றியின்பால் உய்ப்பதன்றோ 'அறிவு'? அவ்வாறன்றி ஒருகால்மனம்தானே ஒருபொருளை அவாவி மேற்சென்று பற்றி நிற்பினும் தனக்கடங்காது மீறிச் செல்லாமல் அதைத்தடுத்துத் தன்வசப்படுத்தி நிறுத்துவதன்றோ 'நிறை'? எக்காரியத்தையும் முந்தியே நன்றாய் ஆராய்ந்து அது கைகூடும் கூடாதென்பதைத் தேர்ந்து பின்பு அதிற் புகுவதன்றோ 'ஓர்ப்பு'? அவ்வாறு எண்ணித் துணிந்து செய்யப் புகுந்த காரியத்தை இடையிடையே யெழும் இடையூறுகளால் உள்ளழிந்து பின்னிட்டொழியாது, மடுத்தவாயெல்லாம் மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாள் தவழ்ந்தும் சகடத்தை இழுத்துய்க்கும் பகடுபோல முன்னூக்கிச் சென்று முடிப்பதன்றோ 'கடைப்பிடி'? என்றும் உன்னிடத்துச் சிறந்து விளங்கிய ஆடவர்க்கின்றியமையாத்தகையவாகிய இக்குணங்கள் இப்பொழுது தீய்ந்தழிந்தது, அன்று வரையகத்தே எதிர்ப்பட்டு உன்னுவியைக்கலக்கி உள்ளமாகிய மீனைப்பிடித்துப் பறியிட்டுச்சென்ற அம்மலைமகளன்றோ? 'வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்தது' என்னும் வாக்குண்மையை இன்று உன்னிடத்தே கண்டறிந்தேன். இனி இக்கையறு கவலையை விட்டெழு. இன்னுமோர் முறை அப்பாங்கியிடஞ் சென்று நயமொழி நவின்று அவள் மனதைத் திருப்பி உனக்கு அவள் உதவிபுரிந்து நிற்குமாறு செய்யப்பார். ஒரு சமயத்தில் யாதானுமொரு காரணம்பற்றி ஒரு காரியத்தைச் செய்வதற்கு உடம்படாதவர் பின்னொருகால் அதற்கு ஒருப்படவுங் கூடும். அல்லது, தலைவியினிடத்து உனக்குள்ள அன்பின் நிலையை நன்கு பரிசோதித்தறிய விரும்பி நேற்று உனது கருத்துக் கிணங்காதவள்போலக் காட்டியிருக்கலாம். அதுவன்றித் தலைவியைத் தனித்துசாவி அவள் கருத்தையும் உணர்ந்து அதன்பின்னரே உனக்கு உறுதிவாக்களிப்பது நேரென நினைத்து நேற்றுப் பிடிகொடாது மறுத்து உன்னை விடுத்திருக்கலாம். ஆகையால் பொறுமையோடு இன்னுஞ் சற்றுத் தேர்ந்து நிதானிக்காமல் அவசரப்பட்டு ஒரு தீர்மானத்துக்கு வருதல் அறிஞர்க்கு அழகன்று. ஐயத்தையுந் துயரத்தையுந் தூரத்தே துரத்திவிட்டு மறுபடியுஞ் சென்று பாங்கியின் துணையை வேண்டிக்கொள். அவள் மறுக்கமாட்டாளென்று எனக்குத் தோன்றுகிறது" என்று உறுதிபல கூறி அவனை உற்சாகப்படுத்திவிட்டுத் தான் அகன்றான்.

பாங்கனைப் பிரிந்த தலைமகன் வீட்டுக்குத் திரும்பி முற்பகல் பாங்கி வாங்காது மறுத்த முத்து வடத்தையும் புதியதோர் பூந்தழைத் தொடையலையையும் தலைவிக்குக் கையுறையாகக் கொண்டு முந்தி அவளைத் தான் எதிர்ப்பட்ட இடத்தே சென்றான். அங்கே தலைவியுமவளும் இருக்கக்கண்டு மகிழ்ந்து அருகடைந்து அவன் பாங்கியை நோக்கி இன்னுரை பலமொழிந்து கையுறைப் பொருளை அவள் கையில் நீட்டினான். அவற்றை ஏற்காமலும் அவனோடு சொல்லாடாமலும் தலைவியை விட்டுப் பிரிந்து அப்பாற்சென்ற பாங்கியைப் பின்தொடர்ந்த தலைமகன் அவள் பூக்கொய்வாள்போல ஓரசோகமரத்தடியே நிற்கக்கண்டு அருந்துயரம் பிடர்பிடித்துந்த அவள் முன்னே சென்று, "கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்ப் பைந்தொடீ! இதுகாறும் என்குறை நின்னால் முடியுமென நினைத்து நின்னை யான் எத்துணை இரந்துநின்றும் நின்மனஞ் சிறிதும் இளகவில்லை. நின் சம்மதமின்றி நின் இன்னுயிர்த் தோழியாகிய தலைவி என்னெண்ணத்துக்கு இணங்கலரிது. நீங்கள் அருளாது என்னை இவ்வாறு அகற்றிடின் மாரன்வாளி வந்து வந்து தைத்துத் துளைத்து வண்டு குடைந்த மரம்போல உள்ளீடற்ற என்னுடற் பொறையை இனி நான் தாங்கி நிற்ககில்லேன். விரைநாறு கூந்தல் விளங்கிழைமென் மடவார் விடநோக்குற்று வெங்காமக் கொடும் பிணியால் நொந்துழல்வார்க்கு அவர்தாம் தம்மாம்பல்வாய் மருந்தளித்துப்பரிகரித்தருளாவிடின் இம்மைக்கும்மறுமைக்கு மேற்ற ஏதமற்றசெயல் மடலேறுவதே யென்று முன்னோர் வகுத்துளரன்றோ. அவ்வாறே நாளை நான் என் மேனி முழுவதும் சுடலைவெண் சாம்பல் பூசி, வெள்ளெருக்கு மென்பூளை இவற்றின் மாலையைத் தரித்து, தலைவியினுருவத்தை ஒரு கிழியில் வரைந்து அதைக் கையிலேந்தி பனைமடலாற் செய்த பரிமாமீதிவர்ந்து பல்லோர் நகைக்கச் சில்லோரிரங்க நம்மூர் வீதியிலே போதருவேன். அதைக்கண்டேனும் எனது ஆர்வமிகுதியையும் ஆற்றாமையையும் அறிந்து இரங்கி அவளை அவள் தாய்தந்தையர் எனக்கு மணஞ் செய்துதர மனமிசையாராயின், நான் ஊணுமுறக்கமும் ஒழிந்து அவ்வாறே கிடந்து உயிர்விடுவேன்; அல்லது உயர்வரை மீதுற்று, அதனின்றுங் கீழே பாய்ந்து மாய்ந்திடுவேன். இது சரதம்." என வஞ்சினங் கூறிநின்றான்.

அப்பொழுது அவன் வாய்ச்சொல்லாலும் முகக்குறியாலும் மனவுறுதியை ஐயமறவுணர்ந்த பாங்கி, "அகனமர்காதல் ஐய! இவ்வியனுலகில் நின்காதலுக் கேற்ற கன்னி இவளொருத்தி தானோ? விரகறியாப் பேதையிவள் பொருட்டு நீர் தகாச்செயல் செய்து அடாப்பழிக்காளாகத் துணிவது தகுமோ? நீர் செய்யத் துணிந்துள்ள மடலேறுவதாகிய இக்காரியம் பழியும் பாவமும் உடையதொன்று என்று நீர் அறிந்திலிர் போலும். அன்றியும் எந்தலைவியின் விஷயமாக அது உம்மாற் செய்து முடிக்கலாகாது. ஆகையால் இவ்வீண் செயலை விட்டொழிந்து மனதை அது ஏகுதற்குரிய நல்வழியிலே செலுத்தி, இல்வாழ்க்கையில் இனிதமர்ந்து நெடுங்காலம் சுகமாக வாழ்ந்திரும்" என்றாள். அதற்கு அவன், "யாழைப் பழித்த தேமொழியாய்! இதனை முன்னோர் ஏதமற்ற செயலென வகுத்து ஒருதலைக் காமத்தால் ஆற்றாது வருந்துவோர்க்கு உரிய முறையென விதித்திருக்க இதனாற் பழியும் பாவமும் உண்டாமென்று நீ கூறுவது எவன்? ஈண்டு எனக்கிது அசாத்தியம் என்பது எவன்? நாளையே நான் இவ்வாறு செய்வதை நீ உன் கண்ணாற் காண்பாய்" எனப் பின்னுந் தன் தீர்மானத்தை வற்புறுத்திச் சொன்னான். அதற்கு

அவன் "அறிவதறிந்து அஞ்சுவதஞ்சும் அறநெறியாள, கரும்பனையின் மடலகத்தே கூடுகட்டி வெள்ளாங் குருகு, சிறுகருங்காக்கை, தூக்கணங் குருவி முதலிய பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சுபொறித் திருக்குமே; அன்றிலின் சேவலும் பெடையும் தணவாதுடனுறைந்து வாழுமே. அவற்றைக் கட்டழித்துப் பனைமடலை வெட்டிக் கொள்ளும்போது அச் சிற்றுயிர்களுக்குச் சேதம் உண்டாகுமே. அருளுடையார் இப்பாவச் செயலுக்கு ஒருப்படலாமோ? இவ்வாறன்றி வேறு எவ்விதம் மடன்மா அமைக்கலாகும். இது கிடக்க, உருவத்தைக் கண்டோர் இன்னான் இவளென்று அறியுமாறு கிழியில் வண்ணத்தால் வரைந்துகொண்டு கையிலேந்திச் செல்ல வேண்டுமே. அது ஓவியத்தொழில் துறையிலே முறைபோகிய ஓடாவிக்கன்றிப் பிறர்க் கெவ்வாறு இயலும். ஒருகால் நீர் துகிலிகைத்தொழில் வல்லீர் எனினும் எந்தலைவியின் அவயவத்தழகு அனைத்தையும் பாங்குற வரைந்தமைத்தல் அநங்கனுக்குமாகாது, ஐய; ஒப்பிகந்த அவள் எழிலுறுப் பனைத்தையுங் கைவல்லபத்தால் நீர் ஒருவாறு எழுதி முடிப்பினும், அனுமானத்தாலன்றிக் கண்ணாற்கண்டறிய வொண்ணாத அவளிடையை எவ்வாறு எழுதிக் காட்ட முடியும். அவளது நவ்விநோக்கனைய மருட்பார்வை, இதழினூறும் இன்னமிர்தம், பாகனைய மென்மொழி, அமிர்தன்ன சாயல், அன்னமும் பிடியும் அழுக்காறுறும் அணிநடை, காதங் கமழுங் கோதை மணம், சுவாசத்தின் சுவாசம் இவற்றை எழுதிக்காட்டு மதிமோகரும் உளரோ?

மேகலை நூனுட்பங் கொள்வதெங்ஙன்;
சிந்தாமணியுந் திருக்கோவையு மெழுதிக்கொளினும்
நந்தாவுரையை எழுதலெவ்வாறு? நவின்றருளே.

ஒன்றையும் விடாது இவற்றையும் அவ்வவ்வுறுப்புக்களோடு தீட்டினாலன்றோ தலைவியினுருவம் நன்கு விளங்கும். இல்லாவிடின் நீர் ஏந்துங் கிழியைக் கண்டார் கிழியென்று சொல்லி உம்மை ஏசாரோ? நீர் இவற்றொன்றையும் எண்ணாது மடலேறத் துணிந்தால் பரிபவமும் பாக்கழிவுமன்றிப் பிறபயனொன்றும் எய்தப்பெறீர். ஆனாலென்? நான் இவையெல்லாங் கூறி மடலேறத் துணிந்த உம்மை அதனின்று விலக்கி உமக்கோர் இடையூறு புரிவதாக நினையாதீர். யான் தலைவியிடஞ் சென்று உம்மெண்ணத்தை அவளுக் கறிவித்து அவள் கருத்தையும் தேர்ந்து வருகின்றேன். அதுகாறும் ஆற்றியிரும். அதன்பின்னர் நீர் வேண்டிற்றைச் செய்யலாம்." என்று உடம்படாதவள்போல முதலிலே கூறிப்பின்பு உடனே, "ஐய, எமக்குள் வேற்றுமையென்பதில்லை.

எனக்காவி நின்னை வருத்தியமானவ் விளங்கிழையாள்
தனக்காவி நானும்.

நான் சொல்வ தொன்றையும் அவள் மறாள். நீர் கொணர்ந்துள்ள கையுறையை என்கையிற் கொடும். அவற்றை அவளிடங்கொடுத்து முத்துவடத்தை மார்பிலும் பூந்தழையை அரையிலும் தரிக்கச்செய்து அவளை இரகசியமாக உம்பாலணையச் செய்கிறேன். நீர் அவலக்கடலுளாழ்ந்தி அல்லற்படாதிரும்" எனத் தேற்றிக் கையுறையை ஏற்றுத் தலைவியிடஞ் சென்றாள். தலைமகனும் பாங்கி தனக்குச் செய்தற்கியைந்த பேருபகாரத்தை நினைத்து நினைத்துப் பாராட்டி,

மொய்ம்மால் வரையென்ன விம்மா எழுவெம்
முகிழ்முலைக்கு
நம்மால் வரையினை நாடொறுஞ் சொல்லி
நலஞ்சிறக்க
எம்மால் ஒருபய னில்லா தருந்தழை
ஏற்றசெங்கை
மைம்மான் விழிக்கொரு கைம்மாறு கண்டிலம்
வையகத்தே

என்றும்,

வன்மொழி போல உரைத்தவெல் லாமிந்த
மங்கைநல்லாள்
இன்மொழி யேமனத் தன்பு விடாமல்
இசைத்தமையால்
மென்மொழி வாய்மைத் திருத் தொண்டர்தாம்
முனம்விட்டெறிந்த
கன்மொழி மாமல ரன்றோ

என்றும் புகழ்ந்து அவள் திரும்பிவருவதை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றான் அவ்விடத்தே.

K. இராமரத்நம் ஐயர்.

அரசியர் மலர்வன மல்லிகை

John Ruskin's
Lilies of Queens' Gardens.

ஓங்கிய புகழொடு திகழ்ந்த ஆங்கிலப்புலவர்களில் ஒருவராய ஜான் ரஸ்கின் என்பவர், 1819-ம் வருஷம் லண்டனில் பிறந்து 1900 வருஷம் வரையில் இருந்தவர். கல்வி கேள்விகளில் முதிர்ந்த உணர்ச்சியுடையவராய்க் கலைகளின் திறத்தைப் பற்றியும் இராஜாங்கப் பொருளாதாய முறைகளைப் பற்றியும் பல உண்மை மொழிகள் பேசியும் எழுதியும் உளர். எத்தகைய புத்தகங்களை எவ்வாறு படிக்கவேண்டும் என்றவர் செய்த ஒரு பிரசங்கத்தையடுத்து, "ஏன் படிக்கவேண்டும்" என்று மறுநாள் செய்த சிறந்த பிரசங்கத்தை இங்கு மொழிபெயர்த்துத் தந்திருக்கின்றோம். பொது வாழ்க்கையில் மாதர்க்கு உரிய இடம் எதுவென்பதும், வாழ்க்கையைச் செம்மையாய் நடத்திவைக்கும்பொருட்டு அவர் எவ்விதப் பயிற்சியடைய வேண்டுமென்பதையும், கல்வியை மேன்மேலும் கற்பதாலல்லாமல் யாவரும் தமக்கேனும் பிறர்க்கேனும் பயனுடையவராவது இயலாதென்பதையும், பேரறிஞராய ரஸ்கின் தன் மெய்யுரைகளால் இங்கு வெகு அழகாய் விளக்கியிருக்கின்றார்:—

இந்த உபந்நியாசம் முன்னொன்றின் தொடர்ச்சியாதலால் இவ்விரண்டினாலும் நான் விளக்கநினைத்தகருத்தை இங்கு விளக்கிச் சொல்வது நலமாகும். எதனைப் படிக்கவேண்டும், எம்முறையிற் படிக்கவேண்டும் என்று, நான் முன்னான் ஆராய்ந்த விஷயம், ஆழ்ந்து கருதவேண்டிய பிறிதொன்றினின்று பிறந்ததேயாகும். புத்தகமும் படிக்கும் முறையும் இவையென்று நான் காட்டியதிலிருந்து, 'நாம் எதற்காக அவைகளைப் படிக்கவேண்டும்' என்று நீங்களே சிந்தித்துக்கொள்ளத் தலைப்படும்படி முயன்று வைப்பதே எனது கருத்தாயிற்று. கல்விப்பயிற்சியும் இலக்கிய உணர்வும் எங்கெங்கும் பரவுதற்கு இக்காலம் இருக்கின்ற சாதனங்கள் எவையாயினும், கல்வியை ஆதாரமாகக்கொண்டு அடையவேண்டிய நிலை எதுவென்பதைப் பற்றியும் இலக்கியங்கள் போதிப்பது

எதுவென்றும் நாம் தெளிவாய் அறிந்திருந்தால் மாத்திரமே, இருக்கும் சாதனங்களை நாம் சரிவர உபயோகப் படுத்திக்கொள்ள இயலும் என்னும் வாய்மையை என் போல நீங்களும் உணருமாறு விரும்புகின்றேன்.

அறம்பிறழா வழக்கங்களும் தேர்ந்த நூல்களைப் படிப்பதும் ஆகிய இவ்விரண்டும் கயவரும் கல்லாதாருமாய மாக்களின்மீது செலுத்துதற்கமைந்தவோர் வன்மையை நமக்கு அளிக்கின்றன வென்பதை நீங்கள் உய்த்துணரவேண்டுமென்பது எனது கோரிக்கை. மெய்யான பொருளில் இதுவே, அதனதன் அளவிற்கேற்றபடி அரசியலாகும். தர்மசிந்தனையும் இலக்கிய உணர்ச்சியும், இவைகளே மக்களுக்கிடையில் ஒருவருக்கு இருக்கவல்ல தாயதாம் அரசுரிமையை அளிக்கின்றன. வேறு எத்தனை எத்தனையோ அரசுகள் இருந்தாலும் அவையெல்லாம் அரசாமோ! கண்பகட்டுச் சின்னங்களும் அடக்கியாளும் அதிகாரமும் அரசோ ஆகா! நெடுங்கொடியும் மணிமுடியும் செங்கோலும்நால்வகைச் சேனையும் சிங்காதனமும் யாவும் வெறும்பகட்டால் பகட்டி நிற்கின்ற தோற்றங்கள். அரசின் நிழல்களே அவையன்றி அரசப் பெருமையே அவைதா மாகுமோ! வேழமுண்ட விளங்கனிபோல் முழுவதாய்த் தோன்றும் போலியரசனின் சின்னங்களைக்கொண்டு இவையே அரசென்று கொண்டாடுவது பேய்த்தேரைப் பின்பற்றிய செய்தியாய் முடியும். மற்றுக் கொடுமையிழைத்தற்கு ஆதாரமாகும் அதிகாரமும் ஒருவனை அரசனென்று ஆக்கிவிடாது. மெய்வழி நிற்கும் வேந்தர்க்கு அதிகாரம் அவசியமே இல்லை. நீதிமுறையாலும் அன்பின் நெறியாலும் ஆள்வர் அவர் நீதியும் அன்பும் போக்கிலே போகவிட்டுத் தன் மனம் போன போக்கெல்லாம் உலகத்தை ஆட்டிவைப்பதற் கமைந்த வன்மையதிகாரத்தால் கொடுங்கோல் செலுத்துவோரை அரசரென்பது மிகவும் பேதைமை.

ஆதலால், இவ்வுண்மையை யான் மீண்டும் உரைக்கின்றேன். கேட்டுங்கள் கருத்திலே பதியவைத்துக் கொள்ளுங்கள். முதலும் முடிவும் இதுவே. வாய்மையே நோக்கின் தூய்மையாய அரசென்று இருப்பதுவும் ஒன்றே முடியொன்று தலைமேல் சூடினாலென், சூடாதிருந்தாலென்! எந்நாளும் நிலைபெற்று இன்றியமையாத் தன்மையில் யாவரும் எய்தவல்ல அரசு எதுவென்றுரைக்கக் கேண்மின். தருமத்தில் தளராத தனிநிலையும், மெய்யறிந்து ஆராயும் மனநிலையும் எய்துவாயாயின் எய்துதற்குரிய அரசும் அன்றே நீயெய்தினாய். மற்றவரை வழிகாட்டி உயர உயர அழைத்தேக இதனால்தான் வல்லவனாகின்றாய். மன்னன்என்ற பதத்தை இப்பொழுதுநேரான படி உபயோகிக்கின்றவரில்லை. பதத்தின்மேல் பொருள் நோக்கின் நிலைபெற்றவன் என்பது தெரியவரும். (மன்னுதல் - நிலைபெறுதல்) நல்லறத்திலும் மெய்யன்பிலும் சலிக்காத வோர் நிலையினை யுடையவன் எவனாயினும் அவன் மன்னவனாகின்றான். இவனுக்கு நடுக்கமு மில்லை, நடுநிலை சாய்வது மில்லை. மெய்யையே தானமரு மொருதனிச் சிங்காதனமாகக் கொண்டு, மாற்றவும் அழிக்கவும் யாவராலும் இயலாவகை வீற்றிருக்கும் அரசும் இவ்வரசு ஒன்றே யாகும்.

அல்லலுற் றலையா அமைதியும் நந்தாது எப்பாலும் நல்குகின்ற நலங்களும் நாமெய்தி அதனால் மற்றவர்க்கும் அவைகளைப் பயக்குவிக்கத் திறமளிக்கும் தன்மையிலே கல்விப் பயிற்சியும் இலக்கிய அறிவும் நமக்கோர் தனியரசாட்சியைத் தருகின்றன என்பதை உய்த்து நாம் உணர்ந்தபின் இன்னொன்று நீங்கள் சிந்திக்குமாறு வேண்டுகின்றேன். கல்வியும் கேள்வியும் நிறைந்தவுடன் கேளாது நம்மை வந்தடையும் அவ்வரசாட்சியில் எத்தகைய எவ்வளவு மாதரார்க் குரியது? மனையாட்டி என்ற மட்டிலே அவரரசு அடங்கிவிடாது. அன்னார் தமதாட்சியை எத்தூரம் செலுத்துதற்கு அழைக்கப்பட்டுளார்? மாட்சியொடு கூடிய மங்கைமார்க்குரிய அரசின் நன்னலத்தை வகைதெரிந்து வினையாற்றின், அதனால் அழகும் ஒழுக்கமும் திகழ அன்னவர் மெல்லடியால் அளந்தாளு மிடமெல்லாம் மலர்வனமாகி, அதனிலவர் ஆற்றும் செயலனைத்தும் மல்லிகை மலர்ந்ததென மணக்கச் சிறுகுடில் முதல் பெருநாடு ஈறாக யாவுமே அவருய்க்கும் அரசால் உய்ந்தனவாகும். ஆயின், மாதருக்கு இயன்ற வினையும் அதனை ஆற்றும் வகையும் இன்று நாம் சிறிதிங்கு ஆராய்வோம். (தொடரும்)

K. இராஜகோபாலன்.

வர்த்தமானம்.

சட்ட அங்கத்தினர் நியமனம்:-சென்னை அரசாங்கச் சட்ட அங்கத்தினர் பதவிக்கு, இதுவரை அட்வகேட் ஜெனரலாயிருந்த, ஸ்ரீமான் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதுவரை அப்பதவி வகித்த ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், மீண்டும் வக்கீல் தொழிலை மேற்கொள்வா ரென்று தெரிகிறது.

***

நீல் சிலை சத்தியாக்கிரஹம்:-நீல்சிலை சத்தியாக்கிரஹம் மீண்டும் துவக்கமாயிருக்கிறது. சென்றவாரம் ஆக்கூர் வரதாச்சாரி என்பவர் களிமண் உருண்டைகளையே ஆயுதங்களாகக்கொண்டு நீல்சிலைதகர்க்கச்சென்று கைதியாயினர். இப்பொழுது சைமன் கமிஷன்விஷயமாய் நாடு மனதைச் செலுத்தியிருப்பதால் சத்தியாக்கிரஹத்தை நிறுத்திவைக்க வேண்டுமென்று தலைவர்களும், சத்தியாக்கிரஹக் கமிட்டியாரும் தீர்மானித்திருந்தும் அச்சத்தியாக்கிரஹி தனது சொந்தப் பொறுப்பில் சத்தியாக்கிரஹத்தைத் துவக்கி யிருக்கிறார் என்று தெரிகிறது. பலர் சிறையில் வாடுவதைப் பார்த்தும் தாம் சுகமாயிருப்பது என்பது தன்னைவருத்தி வந்தமையால் இக்காரியம் செய்ததாகக் கைதியானவர் கூறுகிறார்.

கன்னிமில்லர் இந்து வாதல்:—வடநாட்டில் உள்ள சங்கராச்சாரியார், கன்னிமில்லர் தன்னை இந்துவாக்க வேண்டுமென்று செய்துகொண்ட மனுவை ஏற்று, அவ்வாறே செய்ய ஒப்புக்கொண்டார். ஒரு பத்திரிகை நிருபர், ஸ்ரீ சங்கராசாரியரைக் கண்டு இம்மதமாறுதல் விஷயமாய்க் கேட்டபொழுது அவர் கூறியதாவது:-

"கிறிஸ்தவர்களையும் முகம்மதியர்களையும்இந்துக்களாக்கிவரும் இந்நாளில்இம்மாதினிடம்மாத்திரம் பத்திரிகைகள் ஏன் சீற்றங்கொள்ளவேண்டுமோ தெரியவில்லை? ஒருவரை இந்துவாக்கவும், மற்றொருவருக்கு இந்த உரிமை மறுக்கவும் சாத்திரங் கூறிற்றில்லை. இந்துமதமும், கடவுளும் எல்லாருக்கும் பொதுவானவை. வழிபடவிரும்புவோருக்குச் சன்னதிவாயில் திறந்தேயுள்ளது. எனவே அம்மாதின் விருப்பப்படி இந்துவாக்கச் சம்மதித்தேன். அவரும் உண்மையான இந்துமத வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு அம்மதவரம்பு கடவாது நடப்பதாகச் சொல்லியுள்ளார். இந்தூர் மஹாராஜா அப்பெண்ணை மணப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் எதுவுமில்லை."

நம்பிக்கையில்லாத் தீர்மானம் : — மிதவாதிகளும் காங்கிரஸ்கட்சியினரும் முஸ்லீம் சங்கத்தினரும் ஒருமுகமாய்ச் சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கத் தீர்மானித்திருக்கச்சென்னை மந்திரியான டாக்டர் சுப்பிராயன் மாத்திரம் கமிஷனை ஆதரித்ததினால் ஜனப்பிரதிநிதிகளுக்கு அவர்மாட்டு நம்பிக்கை யில்லையென்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் கட்சியினரான ஸாமி வெங்கடாசலம் செட்டியார் சென்றவாரக் கூட்டத்தின்முன் கொண்டுவந்தார். இத்தீர்மானத்தின் சார்பாக 36 பேரே வாக்குக் கொடுத்தமையால் தலைவர் இதைப் பிரேரேபிக்க அனுமதி மறுத்தார். சுயராஜ்யாப் பத்திரிகை, ஸ்ரீமான் செட்டியார், பலகட்சியாரையும் பார்த்துப் பேசிப் பலம் சேகரிக்காது இத்தீர்மானத்தைக் கொண்டுவந்ததைக் கண்டிக்கிறது. சுதேசமித்ரனோ, மந்திரிமார்களில் ஒருவர்மீது மாத்திரம் கொண்டுவந்தது தப்பிதமென்று கூறுகிறது.

***

சென்னை வரவு செலவுத் திட்டம்:--பிப்பரிவரி மாதம் 28-ந் தேதி கூடிய சென்னைச் சட்டசபையில் பண இலாக்கா அங்கத்தினரான மிஸ்டர் மாயர் கொண்டுவந்த திட்டம், வருமானத்தைக் காட்டிலும் செலவை அதிகமாகக் கொண்டதாகும். வருமான வகையில் 1697-33 லக்ஷமும், செலவு வகையில் 1747-53 லக்ஷமும் காட்டப்பட்டுள்ளது. எனவே திட்டத்தில் விழுந்த துண்டு 50-20 லக்ஷமாகும். இத்துண்டு சென்ற வருஷம் திட்டத்தில் ஏற்பட்ட மிச்சத்தினின்று எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது. கல்வி இலாக்கா வயித்திய இலாக்கா, சுகாதார இலாக்கா, கைத்தொழில் வளர்ச்சி வேலை, நீர்ப்பாசனம், தொழிலாளர் நன்மை, விவசாயம், பிறநிர்வாகப் பொதுச்செலவு இவைகளுக்கென 145 லக்ஷம் கடன் வாங்கவேண்டு மென்றும் திட்டத்தில் காட்டப்பட்டுள்ளது. இவ்விதம் இத்திட்டத்தில் துண்டு விழுந்ததற்குக் காரணம் 1925-ம் வருஷம் முதல் காலகால மழையின்மையினாலும், வெள்ளத்தாலும் நன்கு விளைவு ஏற்படாமையாலும் நிலவரி வஜா செய்ய நேர்ந்ததே யென்றும், 1925-26 இல் 125 லக்ஷமும், 1926-27 இல் 57 லக்ஷமும், 115 லக்ஷமும் வஜா செய்யப்பட்டுள்ளதென்றும்; தவிரவும் கல்வி, சுகாதாரம், வயித்திய வசதி முதலிய அபிவிர்த்தி வேலைக்கு அதிகப் பணம் வேண்டியிருக்கிற தென்றும் பண இலாக்கா அங்கத்தினர் கூறினார். இத்திட்டமும் அங்கத்தினர் கூறிய காரணமும், ஜனப்பிரதிநிதிகளுக்கும், பத்திரிகைகளுக்கும் அதிருப்தியே தந்துள்ளது.

***

லார்ட்டு சின்ஹா இறந்தார்:—இம்மாதம் 4-ந்தேதியன்று லார்ட் சின்ஹா பர்ஹாம்புரியில் இறந்தனரென்று தெரிகிறது. சில தினங்களுக்கு முன் லார்ட் சின்ஹா அவர்கள் மூர்ஷிதபாத்திற்கு அருகிலுள்ள பர்ஹாம்புரியில் தமது இளைய குமாரனைப் பார்க்கச் சென்றார் என்றும், அங்கு மார்படைப்பினால் மாண்டார் என்றும் பின்னர் வந்த தந்திகளால் தெரிய வருகிறது. இவரது பிரேதம் கல்கத்தா கொண்டுவரப்பட்டுத் தகனக்கிரியைகள் நடந்தன. கல்கத்தா கார்ப்பொரேஷன் தலைவர் ஸ்ரீ சென்குப்தா கார்ப்பொரேஷனை மூடியுள்ளார். இவர் மிதவாதி யாயினும் பிரபல இந்தியரில் ஒருவரென்று நாடு முழுதும் இவர் இறந்ததைக் குறித்து வருந்துகிறது.

லார்ட் சின்ஹா ஒரு வங்காள காயஸ்த வகுப்பைச் சேர்ந்தவர். 1863-ம். வருடம் பிறந்தவர். இவரது தகப்பனார், கிழக்கு இந்தியக் கம்பனியின் கீழ் வேலை பார்த்தவர். தகப்பனார் பிள்ளைக்கு ஆங்கிலக் கல்வி பயிலுவித்தார். பிள்ளை படித்து 1877-ம். வருஷம் மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் தேறினார். பிறகு கல்கத்தா பிரசிடென்ஸிகாலேஜில் சேர்ந்து படித்து 23 வயதில் சீமை சென்று பாரிஸ்டர் பரிட்சையிலும் தேறினார். வங்காள ஜமீன்தார் ஒருவர் இவரது படிப்பைக் கண்டு மகிழ்ந்து தமது ஒரே பெண்ணைக் கொடுத்தார். தனது தொழிலில் நற்கியாதியும், வருமானமும் பெற்ற சின்ஹா மெல்ல மெல்ல அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். 1915-ம் வருஷத்தில் சின்ஹா காங்கிரஸில் தலைமை வகித்தார். அரசாங்கத்திலும் பெரும் பதவிகளை வகித்துக் கடைசியில் உதவி இந்தியா மந்திரி வேலையையும், பின்னர் 1921-ம் வருஷம் பீஹார் ஒரிசா மாகாண கவர்னர் பதவியையும் பெற்றார்.

***

இந்திய அரசாங்க வரவு செலவுத் திட்டம் .—இந்தியச் சட்ட சபைக் கூட்டம், புது டில்லியில் பிப்பிரவரி மாதம் 29-ந் தேதியன்று ஸ்ரீபட்டேலின் தலைமையிற் கூடிற்று. பண அங்கத்தினரான ஸர் பேசில் பிளாக்கெட்டு 1928-29-வது வருஷத்திய வரவு செலவுத் திட்டக் கணக்கைச் சபையின் அங்கீகாரத்திற்கு விடுத்தார். அத்திட்டம் பின்வருமாறு:—

உத்தேச வருமானம் ரூ 132 கோடியே 25 லக்ஷம்
உத்தேசச் செலவு ,, 129 கோடியே 60 லக்ஷம்

எனவே இத்திட்டத்தின்படி 2 கோடியே 63 லக்ஷம் மிச்சமாகிறது. 1927-28 வருஷத் திட்டத்தில் திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்படி வரவும், செலவும் 127 கோடியே 74 லக்ஷமாகும். எனவே மிச்சம் எதுவுமில்லை. 1926-27 வருடத்தில் வரவு செலவுத் திட்டத்தில் 2 கோடியே 96 லக்ஷம் மிச்சம் காட்டப்பட்டது. இவ்வருடத் திட்டத்தைக் கொண்டு வருகையில் அங்கத்தினர் கூறியதன் சுருக்கம்:—

"1928-29-ம் வருஷத்தில், இயந்திர சாமான் இறக்குமதிமீதுள்ள வரி விகிதம் குறைந்ததின் பயனாக 10 லக்ஷம் வருமானத்தில் குறைவு ஏற்படுமாயினும், கடற் சுங்க வரியின் மூலம் 5018 லட்சம் வருமானம் கிடைக்கலாம். வருமான வரியால் (Income tax) 17 கோடி ரூபாயும், உப்புவரியால் 7 கோடியும் வருமானம் ஏற்படும் சர்க்கார் அரசாங்க நிர்வாக விஷயமாய்ச் செய்யவிருக்கும் வேலைகளுக்கென்று 25 லக்ஷமும், ரயில் வசதி விஷயமாய் 548 லக்ஷமும் அதிகச் செலவு நேரும் என்றே நினைக்கிறேன். முன்வருடம் போலவே ராணுவச் செலவு வகையில் 55 கோடியே 10 லக்ஷம் செலவாகும். அச்செலவில் குறைக்க வழியில்லை."

பின்னர் ஸர். பிளாகட்டு மாகாண அரசாங்கத்தாரிடமிருந்துவாங்கும் தொகையை,இனி வாங்க நேரிடாதென்றும், அத்தொகையை மாகாண முன்னேற்றத்திற்கான வகையில் அவ்வந்த மாகாணத்தார் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

(6) ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

பாலகாண்டம்	244 பக்கம்	6 காண்டம்
அயோத்தியாகாண்டம்	501 ,,	
ஆரணியகாண்டம்	254 ,,	
கிஷ்கிந்தாகாண்டம்	226 ,,	ரூ. 15
சுந்தரகாண்டம்	260 ,,	
யுத்தகாண்டம்	702 ,,	
சுந்தரகாண்டம் தனியே		ரூ. 2 4 0

கே. மஹாதேவன், புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தா தாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் **4**. வெளிநாடுகளுக்கு ரூபாய் **6.**

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனாம். (7)

யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்
(2) கம்பனி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-ளுஸ்த்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம். 188993
சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்லீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.

(1). இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1913

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்) Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.

Sir. ஹுகும் சந்து ஸரூப் சந்து K. T. வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.

மோடிலால் C ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய். லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஷிஷா எம். மேத்தா M. A. L. L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 2,21592.
வசூலிக்கப்படாத மூலதனம்	ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாஸ் கிர்தர்தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)